பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 21 வியாழக்கிழமை (07-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:317

## படையினர் - புலிகள் நேற்று வவுணதீவில் கூடிப் பேச்சு

ஏறாவூர்,ஒக்.7

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண முக்கியஸ்தர்களுக்கும் பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான உயர் மட்டச்சந்திப்பு நேற்றுக்காலை மட்டக்களப்பு மாவட்ட யுத்த சூனியப்பிரதேசத்தில் உள்ள வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் சுமார் இரு மணிநேரம் நடைபெற்றது.

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்டப்பிரதித் தலைவர் ஸ்கீரின் தலைமையில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இப்பேச்சில் பாதுகாப்பு படையினர் சார்பில் கேணல் அமரதுங்க, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மகேஸ்சமர திவாகர, விசேட அதிரடிப்படை அத்தியட்சகர் வசந்த ரட்ணாயக்கா, உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஏ.எம்.கீரகல ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் மட்டு., அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், வன்னி தலைமையகப் பிரதிநிதி மாஷஜ் மனோஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

சமாதானத்துக்கு எதிரான செயற்பாடுகளைக் கண்டித்து

## திருமலையில் நாளை ஹர்த்தால் தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு

கொழும்பு,ஒக்.7

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருகோணமலையில் நாளை வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு இக் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள குறிப்பில் உள்ளதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டரை வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது, ஆனால், ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. சமாதானத்திற்கெதிரான சதிநாச வேலைகள் மிகவும் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தை திணிப்பதற்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊடகவியலாளருக்கு எதிராக ஜேர்மன் காவல்துறையினர் பாய்ச்சல்!

### பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் வீடு முற்றுகை; பொருள்கள் அள்ளப்பட்டன

பிராங்க்பேர்ட்,ஒக்ரோபர் 7

**இலங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட ஜேர்மன் பிரஜையான தமிழ்ப்பெண் ஊடகவியலாளர் ஒருவருக்கு எதிராக ஜேர்மன் காவல்துறையினர் நேற்றுப் பகல் அதிரடிப் பாய்ச்சல் நடத்தியிருக்கின்றனர். தலைநகர் பிராங்க்பேர்ட்டில் உள்ள அவரது வீடு ஜேர்மன் காவல்துறையினரால் திடீரென முற்றுகையிடப்பட்டது. வீட்டில் உள்ள அனைத்துப் பொருள்களையும் சோதனை செய்யவேண்டும் என்ற பெயரில் அவர்கள் அள்ளிச்சென்றனர். சம்பந்தப்பட்ட பெண் ஊடகவியலாளரையும், அவரது கணவரையும் நீதிமன்றில் ஆஜராகும்படி தெரிவிக்கும் நீதிமன்ற உத்தரவையும் காவல்துறையினர் அவர்களிடம் கையளித்தனர்.**

ஆஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஐரோப்பிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (சங்கமம்), தமிழ் இணையத்தள வானொலி மற்றும் பல்வேறு இணையத்தள ஊடகங்கள் ஆகியவற்றுக்காகப் பணியாற்றி வருபவர் சாந்தி ரமேஷ்.

இவற்றுள் தமிழ் இணையத்தள வானொலி நேரடியாக அவரால் நடத்தப்படுவது.

31 வயதுடைய சாந்தி ரமேஷ் யாழ்ப்பாணம், குப்பிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கணவர் ரமேஷ் வவுனியன் (வயது 36) இலங்கை, வவுனியாவில் பிறந்தவர்.

நீண்டகாலம் ஜேர்மனியில் வசித்துவரும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்

ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகளுக்குத் தாயானார் பேராதனை பிலியந்தலாவைச் சேர்ந்த ஷமிலா குமாரி வீரசேகர (வயது29).

கொழும்பு காசல் வைத்தியசாலையில் நேற்றுக்காலை 10.30 மணிக்கு அவர் குழந்தைகளைப் பிரசவித்தார். குழந்தைகளில் மூன்று பெண்குழந்தைகள், இரண்டு ஆண்குழந்தைகள். குழந்தைகளும் தாயும் நலமாக இருக்கிறார்கள் என வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கரேன்ரகொட தெரிவித்தார். (எ-13)

## சோதனைச் சாவடிகளை 7மணிவரை திறந்திருக்கப் படைத்தரப்பு இணக்கம்

### எனினும் அதற்கு கால அவகாசம் தேவையாம்!

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ். - கண்டி வீதி (ஏ-9) ஊடான போக்குவரத்துக்கு படையினரின் முகமாலை மற்றும் ஓமந்தைச் சோதனைச்சாவடிகள் திறந்திருக்கும் நேரத்தை இரவு 7 மணிவரை நீடிப்பதற்கு யாழ். மாவட்ட படைத்தளபதி சுனில் தென்னக்கோன் சம்மதம் தெரிவித்திருக்கின்றார்.

எனினும் அதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை நேற்று இணைய அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏ-9 வீதியை மக்கள் பாவனைக்கு தாம் காலை 6 மணிமுதல் மாலை 7 மணிவரை திறந்துவிடுமாறு பல்வேறு தரப்பினர் எம்மிடம் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இந்தக் கால நீடிப்பை நடைமுறைப்படுத்த படையினர் தயாராகவுள்ளனர். இருந்தபோதும் படையில் உள்ள ஆளணி பற்றாக்குறையால் உடனடியாக அதனை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. அதற்கு சிறிது கால அவகாசம் தேவை. விரைவில் அந்த நேரநீடிப்பு சாத்தியப்படும் என்று நம்புகின்றேன் என்றார் தளபதி தென்னக்கோன்.

(4-5-7-ரி)

## திருமலையில் டைனமற் வெடிப்பு

கொழும்பு,ஒக்.7

விடுதலைப் புலிகள் வசமுள்ள இரு ஊர்காவலர்களையும் விடுவிக்குமாறு கோரி திருகோணமலையில் அவர்களது உறவினர்கள் உண்ணாவிரதம் இருந்துவரும் இடத்திற்கு அருகில் டைனமற் குண்டு வெடித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் சிலர் இந்தக் குண்டை வெடிக்கவைத்தனர் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்தவெடிப்பால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை. இது குறித்து பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. (எ-க)

## படையினரால் மக்களுக்கு ஏற்பட்ட கசப்பான சம்பவங்களுக்காக வருந்துகிறாராம் தளபதி!

### இணையப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் அவரே தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.7

கடந்த காலங்களில் குடாநாட்டில் படையினரால் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கசப்பான சம்பவங்களுக்காக தான் மிகவும் மனம் வருந்துகின்றார் என்று யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை நேற்று இணைய அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

கடந்த காலங்களில் படையினருக்கும் மக்களுக்கும் இடையில் பல்வேறு கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

அதற்காக மனம் வருந்துகின்றேன். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாது பார்த்து, மக்களுடன் புரிந்துணர்வுடன் செயற்படுவதனையே விரும்புகின்றேன்.

மக்களைப் படையினரும் படையினரை மக்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் உண்டு. அது தொடர்பாக ஆராய்வதற்காகவே மக்கள் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றேன்.

இனங்காணப்படும் பிரச்சினைகளில் என்னால தீர்வுகாணக்கூடியவற்றிற்கு தீர்வுகாணுவதுடன் ஏனையவற்றை மேலிடத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பேன்.

உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்கு வெளியே 600 மீற்றர் தூரத்திற்கு அப்பால் தற்போது 2 ஆயிரத்து 112 குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய குடும்பங்களில் 5 குடும்பங்கள் வீதம் மீளக்குடியமர்த்த நட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதிகள் ஜெனீவாவில் புலிகளுடன் சந்திப்பு

ஜெனீவா,ஒக்.7

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளும் ஜெனீவாவிலுள்ள மனித உரிமைகள் அமைப்பின் நிபுணர்களும் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். ஜெனீவாவில் நடந்த இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

அன்றையதினம் பின்னதாக முரண்பாட்டுக் காலங்களில் மனித உரிமைகளை எப்படிப் பேணுவது என்பது தொடர்பாக மனித உரிமைகள் சட்டத்தரணி கேர்ன் பார்க்கர் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## காதரின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டது

கொழும்பு,ஒக்.7

முன்னாள் அமைச்சரும் ஐ.தே.கட்சி எம்.பியுமான காதரின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில், மாவட்ட நீதிமன்றில் நேற்று காதர் ஹாஜியார் ஆஜர்படுத்தப்பட்டார். அவரின சார்பில் சட்டத்தரணியும் முன்னாள் நிதி அமைச்சருமான கே.என்.சொக்ஸி ஆஜரானார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி அளவில் நோன்பு வருகிறது. முஸ்லிம்கள் நோன்பு நோற்க வேண்டும் இதனைக்கருத்தில் கொண்டும் -

காதர் எம்.பியின் உடல் நிலையைக்கருத்தில் கொண்டும் பிணையில் செல்ல அவரை அனுமதிக்குமாறு சட்டத்தரணி சொக்ஸி நீதிவானிடம் கேட்டுக்கொண்டார்.

சட்டத்தரணியின் கோரிக்கையை நிராகரித்த நீதிவான், எதிர்வரும் திங்கட்கிழமை 11 ஆம் திகதி அவரை மீண்டும் மன்றில் ஆஜர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தேசிய ஆலோசனைச் சபை கேலிக்கூத்து

# ஆட்சிப்பகிர்வை ஆதரிப்போரைக் கொண்ட சமாதான அபிவிருத்திக் கவுன்ஸில் நிறுவுக

## புதிய இடதுசாரி முன்னணி வலியுறுத்து

கொழும்பு,ஒக்.7

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச் சபை என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் முயற்சி பெரும் கேலிக்கூத்தாகும் - என்று புதிய இடதுசாரி முன்னணி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தமது பேச்சில், விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சைத் தொடங்கலாம் என்று கூறினார்.

ஆனால் அவரது அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பியின் பிரமுகரும் பாதாள உலகத்தில் இயங்கும் தேசப்பற்றாளர் முன்னணி தலைவருமான விமல் வீரவன்ச ஜனாதிபதி சொன்னதற்கு நேர் எதிராக பிரசாரம் செய்கின்றார்.

இத்தகையோரின் கூட்டினால் இணக்கநிலைக்கு வரமுடியும் எனக் கூறுவது சிரிப்புக்கு இடமானதாகும் - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சற்றேனும் அறிவுபூர்வமாக நடந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக ஆகக் குறைந்தது ஆட்சிப் பகிர்வை ஆதரிப்போரைக் கொண்ட சமாதான அபிவிருத்திக் கவுன்ஸில் ஒன்றை நிறுவி, சமாதானப் பேச்சுக்கு விரைந்து நகருமாறு அவரை வலியுறுத்துகிறோம் - என்றும் புதிய இடதுசாரி முன்னணியின் அறிக்கையில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## கஞ்சா வை[illegible]திருந்தவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.7

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒரு கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மேரி ஜோசெப் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த சூரியகுமார் சுகிர்தன் யாழ். பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதனை அடுத்து அவரை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட குற்றவாளி வேறு குற்றச் செயல்கள் எவற்றுடனாவது தொடர்புபட்டுள்ளாரா? என்பதனை ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றில் சமர்பிக்குமாறும் யாழ்.பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (4-5)

## போயாதின அன்னதானம் உண்டோரில் மற்றொரு நபரும் நேற்று உயிரிழந்தார்

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை போயா தினத்தன்று மவுசாகலை தோட்டத்தின் சமன் தேவாலயத்தில் அன்னதானம் உண்டு, வாந்தி, வயிற்றோட்டப் பாதிப்புக்கு உள்ளானவர்களில் மற்றொருவரும் நேற்று உயிரிழந்தார்.

இவரோடு இச்சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்தது.

இந்த அன்னதானத்தில் உணவருந்திய பல நூற்றுக்கணக்கானோர் வாந்தி வயிற்றோட்டத்துக்கு உள்ளாகி, வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர் என்பது தெரிந்ததே.

அவர்களுள் அப்பாக்குட்டி பாலகிருஷ்ணன் (வயது46) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை நேற்று நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து மவுசாகலை தோட்டத்தின் ஐந்து பிரிவுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து ஐந்நூறு தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர். மவுசாகலை, சீட்டன், சீபாதம், ரதபூட், லக்கம் ஆகிய பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களே வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், நேற்று ரதபூட் பிரிவிலிருந்து சுமார் 70 பேர் இவ்வாறு வாந்தி, வயிற்றோட்டம் காரணமாக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுச் சென்றுள்ளனர்.

இதற்கிடையில், மஸ்கெலியா அரசினர் வைத்தியசாலையில் தற்போது மருந்துக்கும் தட்டுபாடு நிலவிவருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவகாரம் குறித்து இப்பகுதிப் பிரமுகர்கள் ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா , இப்பகுதி உதவி அரச அதிபர் ஆகியோருக்கு கடிதம் மூலம் முறையிட்டுள்ளனர். (எ-க)

### அல்லாரை விவசாயிகளுக்கு உள்ளீடுகள் அன்பளிப்பு

சேவாலங்கா நிறுவனம் -அல்லாரைக் கிராமசேவையாளர் பிரிவில் விவசாயிகள் 100 பேருக்கு விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்லாரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

இதில் விவசாயப் பயிர்ச்செய்கைக்கான மருந்து தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.

இத்தெளிகருவிகள் 5 விவசயிகளுக்கு ஒன்று என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் சேவாலங்கா நிறுவனத்தின் யாழ்.மாவட்ட திட்டப் பணிப்பாளர் எஸ். ஆனந்தராசா, உத்தியோகத்தர் சுபாசினி, கிராம சேவை உத்தியோகத்தர் த.மகாலிங்கம், சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர் மா. ஜெயமோகன் துரைராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (4-31)



யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் இணையத்தில் இடம்பெற்ற படைத்தளபதியினர் இணையப் பிரநிதிகளுக்கான சந்திப்பின்போது எடுக்கப்பட் படம்.

## ஆசிரியர் உட்பட இரு முஸ்லிம்கள் வெலிக்கந்தையில் சுட்டுக்கொலை!

### மற்றொரு சம்பவத்தில் தமிழர் காயம்

ஏறாவூர்,ஒக்.7

பொலன்னறுவை மாவட்டம் வெலிக்கந்தைப் பிரதேசத்தில் ஆசிரியர் ஒருவர் உட்பட இரண்டு முஸ்லிம்கள் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க் கிழமை) இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் கட்டுவன்வில்லைச் சேர்ந்த ஆசிரியர் கே.எம்.குத்தூஸ் (வயது 47) மற்றும் என்.எம்.சேகு மொகமது (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

சம்பவதினம் இரவு இவர்கள் அத்துகல கிராமத்திலுள்ள தமது உறவினர்களின் வீட்டிற்கு சென்று விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த சமயமே இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து அப்பிரதேசத்தில் தற்போது பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

வெலிக்கந்தை பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை இரவு பொலன்னறுவை முஸ்லிம் கொலனியில் ஒருவர் சுடப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கே.ரஞ்சன் (வயது 38) என்ற இந் நபர் தொழில்புரியும் தனியார் அரிசியாலைக்குள் பிரவேசித்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ.க)

## யாழ்நகரில் உள்ள விடுதி ஒன்றில் ஓமம் வளர்த்து பிறந்தநாள் விழா!

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்நகரில் உள்ள விடுதி (லொஜ்) ஒன்றில் இந்துக்களின் பாரம்பரிய முறைப்படி தவில் - நாதஸ்வரம் முழங்க ஓமம் வளர்த்து பிறந்தநாள் விழா ஒன்று நடைபெற்றிருக்கிறது.

யாழ்.நகரை அண்டிய மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் விடுதியில் நேற்று இந்தப் பிறந்தநாள் வைபவம் இடம்பெற்றது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த சிவகுமார சர்மா - சகானா என்ற சிறுமியின் முதலாவது பிறந்தநாள் அவரது பிறந்த நட்சத்திர நன்னாளில் நடத்தப்பட்டிருக்கிறது.

இணுவில் காயத்திரி பீடத்தின் அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் ஏராளமான அந்தணப் பெருமக்களுடன் துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் கலந்து ஆசிவழங்கினார்.

இந்துக்களின் முறைப்படி ஓமம் வளர்த்து பிளளையின் வாழ்வு செழிக்கவும் நீண்ட ஆயுள் விருத்திக்காகவும் கிரியைகள் செய்யப்பட்டன.

மேலைததேய கலாசார மரபுகள் வளர்ந்து எமது பாரம்பரிய முறைகள் அற்றுப் போகும் - அதாவது மேலைத்தேய வாத்தியங்களுடன் 'கேக்கில்' மெழுகுவர்த்தி கொளுத்தி, அந்த மெழுகுவர்த்தியை அணைத்து, பிறந்தநாள் விழாக்கள் நடைபெறுகின்ற இக்காலத்தில் இந்துக்களின் பாரம்பரிய மரபைப் பேணி குத்து விளக்கேற்றிக் கீழைத்தேய வாத்தியங்களுடன் இவ்வாறான ஒரு பிறந்ததின நிகழ்வு விடுதி ஒன்றில் இடம்பெற்றிருப்பது பலரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றது. (4)

## புதிய பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் வவுனியா சுகாதாரப் பரிசோதகர்கள்

வவுனியா, ஒக்.7

வவுனியாவில் பணியாற்றிவரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் புதிய பிரச்சினைக்கு முகங்கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் பணியாற்றிவரும் சுகாதாரப் பரிசோதகர்கள் கட்டாயமாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் காவி நிறச் சீருடையினை அணியவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

காவி உடை பொலீஸாரின் சீருடை என்றும் -

இதன் காரணமாக அந்தச் சீருடையினை அணிந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் - சுகாதாரப் பரிசோதகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-164)

## முல்லைத்தீவில் எலும்புக்கூடு மீட்பு

முல்லைத்தீவு,ஒக்.7

1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியபோது உயிரிழந்த இராணுவச் சிப்பாய் ஒருவரினுடையது என்று கருதப்படும் எலும்புக்கூடு ஒன்று கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இரு மாடிக் கட்டடம் ஒன்றின் இடிபாடுகளை அகற்றிய சமயம் அதற்குள் இந்த எலும்புக்கூடு காணப்பட்டது. அதில் இராணுவச் சீருடையும் காணப்பட்டது என்று பணியாளர்கள் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து உடனடியாக அந்த இடத்திற்குச் சென்ற தமிழீழக் காவல்துறையினர் எலும்புக்கூட்டை தமது பணிமனைக்கு எடுத்துச் சென்றனர். (எ.க)

# தமிழக மீனவர் கைதினால் இராமேஸ்வரத்தில் பதற்றம்!

சென்னை,ஒக்.7

மன்னார் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்ட நிகழ்வு தமிழகம் இராமேஸ்வரம் கரையோரப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த திங்களன்று மாலை பெரும் எண்ணிக்கையான ட்ரோலர்களில் தமிழக மீனவர்கள் மன்னார் கடற்பரப்புக்குள் ஊடுருவினர் என்று கூறப்படுகின்றது.

இலங்கைக் கடற்படையினர் அவர்களைச் சுற்றிவளைக்க முற்பட்ட சமயம் பெரும்பாலன ட்ரோலர்கள் தப்பி ஓடிவிட்டன.

ஐந்து ட்ரோலர்களுடன் அதில் வந்த 25 மீனவர்கள் சிக்கிக்கொண்டனர். அவர்களை இலங்கைக் கடற்படையினர் தலைமன்னார் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலீஸார் இவர்களை நேற்றுமுன்தினம் மாலை மன்னார் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

ட்ரோலர்களைத் தடுத்து வைக்க உத்தரவிட்ட நீதிவான் அவற்றைச் செலுத்தி வந்த ஐந்து ஓட்டிகளையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி பணிததார்.

எஞ்சிய மீனவர்கள் 15 பேரையும் விடுவித்த நீதிவான், சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் அவர்களை ஒப்படைக்கும்படி இலங்கைக் கடற்படையினருக்கு உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் இராமேஸ்வரம் மானாமதுரைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இதனால் இராமேஸ்வரத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த இருநாள்களாக இராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றிலும் குதித்துள்ளனர்.

இலங்கைச் சிறையில் உள்ள சகல இந்திய மீனவர்களும் விடுவிக்கப்படவேண்டும் என்று கோரியுள்ள அவர்கள், இப்பிரச்சினைக்கு தமிழக மாநில அரசும், இந்திய மத்திய அரசும் உரிய தீர்வைப் பெற்றுத்தரும்வரை தமது உணணாவிரப் போராட்டம் தொடரும் என்றும் அறிவித்துள்ளனர்.

தமிழக மீனவர் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து வேறு பெரும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் அவர்கள் தயாராகி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. அங்குள்ள மீனவ சங்கங்களின் ஒன்றியக் கூட்[illegible] ஒன்று நேற்றுமாலை நடைபெற ஏற்பாடகி[illegible]ந்தது. (எ-க)

# சதாமுக்கும் அல் - கெய்டாவிற்கும் தொடர்பா? ஆதாரமில்லை என்கிறார் அமெரிக்க அமைச்சர்

வாஷிங்ரன்,ஒக்.7

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கும் அல்-கெய்டா இயக்கத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது என்பதற்குப் போதிய ஆதாரமில்லை என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை தொடர்பான ஒரு கேள்வி - பதில் நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் கூறுகையில்:-

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கும் அல்-கெய்டாத் தீவிரவாத இயக்கத்தினருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஈராக் மீது போர் தொடுப்பதற்கு முன்னர் நம்பப்பட்டது. அதற்கான போதிய ஆதாரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. உளவுத்துறையினர் அது தொடர்பாகச் சமர்ப்பிக்கும் அறிக்கைகள் வியப்பூட்டுகின்றன. அவர்களது அறிக்கைகள் முரண்படுகின்றன.

ஈராக்கின் உள்ளேயும் வெளியேயும் தொடர்புடைய ஒருவர் அல்-கெய்டா இயக்கத்துடன் நெருக்கமானவர் என்று சமீபத்தில் ஒரு அறிக்கையில் படித்தேன். அவருக்கு அல்-கெய்டாவுடன் தொடர்பு இருக்கிறது என்பதையும், இல்லை என்பதையும் மிகவும் சிரமப்பட்டு அதில் நியாயப்படுத்தியிருந்தனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் அவர்களுக்கிடையே தொடர்பு இருந்ததை நம்ப முடிகிறது. அப்போது இரசாயன மற்றும் பேரழிவு ஆயுதப் பயிற்சி வழங்கியதை ஓரளவு நம்பலாம். இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய அப்போது திட்டமிட்டிருக்கலாம். ஆனால், தற்போது அதற்குரிய ஆதாரம் ஏதுமில்லை.

ஈராக் மக்கள் மீதும் அண்டை நாடுகள் மீதும பேரழிவு ஆயுதங்களை சதாம் ஹுசைன் பயன்படுத்தினார் என அமெரிக்க அதிபர் புஷ் திடமாக நம்பினார். அந்த ஆட்சியை அகற்ற விரும்பினார். அதுதான் போருக்கு முக்கியமான காரணம். ஆனால், அங்கு பேரழிவு ஆயுதங்கள் எதையும் எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

உளவுத்துறையின் தவறான தகவல் பற்றி நான் கருத்துக்கூற விரும்பவில்லை. அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால், சதாம் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு உலகம் நிம்மதியாக இருக்கிறது.

- இவ்வாறு ரம்ஸ்பீல்ட் கூறினார். (க-8)

## பயங்கரவாதத்தினை எதிர்த்து தென்கொரியா - இந்தியா ஒப்பந்தம்

புதுடில்லி,ஒக்.7

இந்தியா வந்துள்ள தென்கொரிய அதிபர் ரோ-மூ-ஹைறன் நேற்றுப் பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி அப்பதுல் கலாம் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் முன்னிலையிலும் கொரிய அதிபர் முன்னிலையிலும் இருநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் பயங்கரவாதத்திற்கு எதிரான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதுபோல் மேலும் இருதரப்பு உறவுகள் குறித்த பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

# மசகு எண்ணெய் விலை குறையும் 'ஒபெக்' தலைவர் நம்பிக்கை!

'காத்திருங்கள்' அடுத்த ஆண்டு ஆரம்ப காலப்பகுதியில் மசகு எண்ணெய்யின் விலை பீப்பாய் ஒன்றுக்கு 40 டொலரையும் விடக் குறைவடையும் என்று எண்ணெய் வள நாடுகள் (ஒபெக்) அமைப்பின் தலைவா புர்நோமோ யுகிசிகியாண டாரோ தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாகவே சர்வதேச அளவில் மசகு எண்ணெய்யின் விலை பீப்பாய்க்கு 50 டொலர் என உயர்வடைந்துள்ளது. இந்த விலையேற்றம் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

நைஜீரியா நாட்டில் இரு போட்டி கோஷ்டிகள் அங்குள்ள எண்ணெய் வளத்தைக் கையில் எடுத்துக்கொள்ள நடத்திய சண்டைதான் இந்த் அளவுக்கு, அதாவது 21 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மசகு எண்ணெய்யின் விலை உயர்ந்ததற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

ஆனால், நேற்றுமுன்தினம் நைஜீரியாவிலுள்ள போட்டிக் கோஷ்டிகளிடையே சண்டை நின்று சமரசம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் மசகு எண்ணெய்யின் விலை குறையவேண்டும். குளிர்காலம வந்துவிட்டதால் அமெரிக்கா உட்பட பணக்கார நாடுகள் பயன்படுத்தும் எண்ணெய்யின் அளவு மிகவும் அதிகமாக இருக்கும். இதனால் அடுத்த ஆண்டு பெப்ரவரிக்கு பின்னர் தான் நிலைமை சீராகும் என்று கூறப்படுகிறது.

அத்துடன், அமெரிக்காவுக்கு அதிகளவில் எண்ணெய் வழங்கும் மெக்சிக்கோ நாட்டிலும், வளைகுடாவிலும் எண்ணெய் உற்பத்திப் பணிகள் முழுவீச்சில் நடக்கவில்லை. காரணம் அங்கு சமீபத்தில் ஏற்பட்ட கடும் புயல் மசகு எண்ணெய் உற்பத்திக்குத் தடையாகிவிட்டது.

இன்றைய சூழ்நிலையில் மசகு எண்ணெயின் விலை அளவுக்கதிகமாக அதிகரித்துவிட்டது. இதனால் சுமார் 90 நாடுகள் மசகு எண்ணெய் உற்பத்தியை அதிகரித்தபோதும், விலை கணிசமாக இறங்கவில்லை. (க-8)

உலக அரங்கில்

# சீனாவில் பட்டாசுத் தொழிற்சாலை வெடிவிபத்தில் 24 பேர் மரணம்!

சீனாவில் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 24 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 28 பேர் படுகாயமடைந்தனர்.

சீனாவின் தென்மேற்கிலுள்ள கவுங்சி பகுதியில் ஆறு பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றின் ஒன்றில் நேற்றுமுன்தினம் பெரும் வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் 24 பேர் பலியாகினர். 28 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த வெடிவிபத்தில் தொழிற்சாலைக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வெடித்துச் சிதறின. சிதறிய பாகங்கள் சம்பவ இடத்திலிருந்து நான்கு கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் வரை கிடந்தன. வெடிச்சத்தம் 10 கிலோ மீற்றர் வரை கேட்டது எனச் சம்பவத்தை நேரில் கண்ட நபரொருவர் தெரிவித்தார். சம்பவம் நடந்த இடத்தில் அம்புலன்ஸ் போன்ற வசதிகள் இல்லாததால் காயமடைந்தவர்கள் தனியார் மோட்டார் சைக்கிள்களில் வைத்து அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர். மேலும், பலத்த காயமடைந்தவர்களை கவுங்சி நகர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இந்த வெடிவிபத்து குறித்துப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (க-8)

# ஈராக்கின் சதர் நகரில் கடும் சண்டை மூண்டது!

அமெரிக்க இராணுவத்தினருக்கும் முஸ்லிம் சமயத் தலைவர் முக்டா அல் சதாரை ஆதரிக்கும் கிளர்சியாளர்களுக்குமிடையில் சதர் நகரில் சண்டை நடைபெறுகிறது எனக் கிளர்ச்சியாளர்களின் அல் - மஹ்தி படையின் செய்தித் தொடர்பாளர் அபுதார் அல் - கினானி தெரிவித்தார்.

ஜனவரியில் நடைபெறவுள்ள தேர்தலில் அவர்கள் பங்கேற்காமல் தடுக்கும் நோக்கில் முகடா அல்- சதாரின் இயக்கத்தை ஒழிப்பதற்கே அமெரிக்க இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை -

சமாராவில் வெளிநாடுகளைச் சேர்ந்த 40 கூலிப் படையினரை ஈராக் தேசிய இராணுவம் கைதுசெய்துள்ளது.

இத்தகவலை ஈராக் பாதுகாப்பு அமைச்சா ஹசீம் தாலன் தெரிவித்தார்.

எகிப்தியர்கள், சூடானியர்கள், டுனீசியர்கள் அந்தக் கூலிப் படையில் உள்ளனர். அவர்கள் கூட்டணிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் விசாரணைக்குப் பிறகு மீண்டும் ஈராக் படையினரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

அமெரிக்கப் படைகளுடன் இணைந்து ஈராக தேசிய இராணுவம் கடந்த வாரம் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகளின் பிடியிலிருந்து சமர்ரா நகரம் மீட்கப்பட்டது. (க-8)

# இஸ்ரேல் துப்பாக்கிச் சூடு: பலஸ்தீனச் சிறுமி பலி!

மத்தியகிழக்கு காஸாவில் தெற்கே இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கும் பகுதியொன்றில் இஸ்ரேலியப் படையினர் பதின்மூன்று வயது பலஸ்தீனச் சிறுமி ஒருத்தியைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

பாடசாலைக்குச் செல்லும் வழியில் அந்தச் சிறுமி கண்காணிப்புக் கோபுரம் ஒன்றிலிருந்து வந்த சுமார் இருபது தோட்டாக்களால் தாக்கப்பட்டாள் என்று பலஸ்தீனச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால், உள்ளே வரக்கூடாது என்று அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பகுதிக்குள் அந்தச் சிறுமி நுழைந்தாள் என்றும், அவள் எடுத்து வந்த பையொன்றில் குண்டிருக்கலாம் என்று சிப்பாய்கள் கருதினார்கள் என்றும் இஸ்ரேலியப்படைத்தரப்பு வட்டாரம் ஒன்று கூறியது.

காஸாவின் வடபகுதியில் இஸ்ரேலியப் படையினர் தங்கள் இராணுவ நடவடிக்கையைத் தொடரும் அதேவேளையில் இந்தச் சூட்டுச்சம்பவம் நடந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-8)



மராட்டிய மாநில சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதையொட்டி, காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தியும், தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவாரும் ஒரே மேடையில் பிரசாரம் செய்யும் காட்சி இது.

# தென்னிந்திய தமிழ்த்திரை உலகு விருதுகள் அண்மையில் அறிவிப்பு



தென்னிந்திய தமிழ்த் திரைஉலகுக்கு தமிழக அரசினால் வருடாவருடம் வழங்கப்பட்டுவரும் விருதுகளின் விவரம் கடந்த வாரம்தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை 2000, 2001, 2002 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒரேதடவையில் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த மூன்று வருடங்களாகத் தமிழ்த் திரையுலகினருக்கும், தமிழக முதல்வருக்கும் இடையில் நிலவிவந்த கருத்து முரண்பாடுகள் காரணமாகவே ஒவ்வோர் ஆண்டும் அறிவிக்கப்படவேண்டிய இந்த விருதுகள் அறிவிக்கப்படாமல் தடைப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து, திரைப்பட நடிகர்கள் ஒன்றுசேர்ந்து தமிழக முதல்வரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதையடுத்து, தமிழக முதல்வர் சமாதானமாகி மூன்று ஆண்டுகளுக்கும் உரிய விருதுகளை ஒரே தினத்தில் அறிவித்துள்ளார். விருதுகளின் விவரம் ஆண்டுரீதியாக கீழே தரப்பட்டுள்ளது.

| | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|
| சிறந்த படம் | வானத்தைப்போல (முதல்பரிசு) வானவில் (இரண்டாம் பரிசு) வெற்றிக்கொடிகட்டு (மூன்றாம் பரிசு) | விரும்புகின்றேன் (முதல்பரிசு) பாண்டவர்பூமி (இரண்டாம்பரிசு) ஆனந்தம் (மூன்றாம் பரிசு) | ரமணா (முதற்பரிசு) கன்னத்தில் முத்தமிட்டால் (இரண்டாம் பரிசு) உன்னைநினைத்து (மூன்றாம் பரிசு) |
| சிறந்த நடிகர் | முரளி (கடல்பூக்கள்) | சூரியா (நந்தா) | மாதவன் (ரன், அன்பேசிவம், கன்னத்தில் முத்தமிட்டால்) |
| சிறந்தநடிகை | தேவயானி (பாரதி) | சிநேகா (வரும்புகிறேன், ஆனந்தம, புன்னகைதேசம்) | மீனா (இவன்) |
| சிறந்த பாடகர் | ஹரிஸ்ராகவேந்திரா (பாரதி) | உன்னிகிருஷ்ணன் (தில்) | உன்னிமேனன் (உன்னைநினைத்து), வருஷமெல்லாம் வசந்தம் |
| சிறந்த பாடகி | பவதாரணி (பாரதி) | சுஜாதா (தில்) | சின்மயி (கன்னத்தில் முத்தமிட்டால்) |
| சிறந்த நகைச் சுவை நடிகர் | வடிவேலு (வெற்றிக்கொடிகட்டு) | வடிவேலு (தவசி) | விவேக் (ரன்) |
| சிறந்த நகைச் சுவை நடிகை | - | கோவைசரளா (பூவெல்லம் உன்வாசம்) | - |
| சிறந்த இசைய மைப்பாளர் | தேவா (குஷி, உயிரிலேகலந்தது, சந்தித்தவேளை) | வித்யாசாகர் (தில், தவசி, பூவெல்லம் உன்வாசம்) | சிற்பி (உன்னைநினைத்து) |
| சிறந்த இயக்குநர் | விக்ரமன் (வானத்தைப்போல) | சுசிகணேசன் (விரும்புகிறேன்) | மணிரத்தினம் (கன்னத்தில் முத்தமிட்டால்) |
| சிறந்த வில்லன் நடிகர் | பிரகாஷ்ராஜ் (அப்பு, வானவில்) | அலெக்ஸ் (மிட்டாமிராசு) | நாசர் (தமிழ்) |

## சனசமூக நிலையத்துக்கு கணனி அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,ஒக்.7

வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்திற்கு வடலியடைப்பைச் சேர்ந்த மகாலிங்கம் தனராசா என்பவர் புதிய கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற சனசமூக நிலையத்தின் பொன்விழாவில் வைத்து இந்தக் கணனி நிலையத் தலைவர் க.தர்மராசாவிடம் கையளிக்கப்பட்டது.

(ஐ-135)


**வீடியோ புறஜெற்றர் விற்பனைக்கு**

SHARP XV-335 P(D)

விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: ஞா.பிரகாஷ்,
தெருமூடி மடத்தடி, அல்வாய் கிழக்கு,
பருத்தித்துறை.
T.P.: 0776029104 (37278)(42)


## பாடசாலையில் சாரணர் பிரிவு விஜயதசமியன்று ஆரம்பம்

வலி.தென்மேற்கு,ஒக்.7

வட்டுக்கோட்டை பிளவத்தை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று இதன் ஆரம்ப வைபவம் நடைபெறும்.

(ஐ-135)

## வீதிகள் திருத்தப்படும்

வலி.தென்மேற்கு,ஒக்.7

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீத் திட்டத்தின்கீழ் பொன்னாலை கம்மாலை வீதி, அராலி வண்ணா வீதி ஆகிய வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

(ஐ-135)

# இளைஞர் – யுவதிகளுக்கு மானிப்பாயில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.7

இளைஞர் - யுவதிகளுக்கான தொழில் நிபுணத்துவம் சம்பந்தமான கருத்தரங்கு எதிர் வரும் திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு மானிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

'ஆதிஷா ஆட் அன்ட் டிசைன்ஸ்' நிறுவன தொழில் பயிற்சியாளர் திருமதி வாசுகி குமார தாஸன் தொழில் பயிற்சி சம்பந்தமாக ஒரு மணிநேரம் விரிவுரையாற்றுவார். செய்முறை விளக்கமும் அளிக்கப்படும்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 80 சதவீதமான இளைஞர் - யுவதிகள் படித்து விட்டு வேலையற்ற நிலையில் உள்ளனர்.

இவ்வாறான வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பிரதேச சபை இந்தக் கைத்தொழில் பயிற்சியை வழங்கவுள்ளது.

கருத்தரங்கின் பின்னர் அடுத்த மாதம் முதல் முழுநேரப் பயிற்சியில் ஈடுபட இளைஞர் - யுவதிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர்.

முதற்கட்டமாக சாறி வகைகளிலும் துணி மற்றும் ஆடைகளில் வர்ண அலங்காரம், ம[illegible] பாண்ட வேலைகள், சிறு அன்பளிப்புப் பொருள்களுக்கான கைப்பணிப் பயிற்சி, கேக் ஐசிங் மற்றும் இதர பயிற்சிகள் பூ அலங்காரங்கள் என்பன வழங்கப்படும்.

மேற்படி பயிற்சியில் சனசமூக நிலைய நிர்வாகிகள், உறுப்பினர்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், முன்பள்ளி ஆசிரியர்கள் பாடசாலை மாணவ, மாணவிகள் ஆகியோரைக் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் கேட்டுள்ளார். (ஐ-185)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் சண்மார்சிங்
அவர்களின் அன்புத் தந்தையார்

**செல்லத்துரை பிலிப்தும் மார்சலின்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

- புனித. அந்தோனியார் கல்லூரிக் குடும்பம்.

ஊர்காவற்றுறை. (37282) (34-14-44-26)



## நீங்காத நினைவுகளுடன் ஆறாண்டுகள்

மனம் மகிழ 08 - 01 - 1935



மனம் நெகிழ 07 - 10 - 1998

**அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை**

(Retired Police Inspector)

புண்ணியங்கள் பல செய்து
ஏற்ற மிகு தலைவியை
ஏதுவாய் தவிக்க விட்டு
மகிழ்வுடன் மக்கட்
செல்வங்கள் பெற்று
தந்தையாய் அமர்ந்த போது
அறியாது வந்த காலனவன்
அழைத்துச்சென்று ஆறாண்டுகள் ஆகிவிட்டன.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகள், பேர்த்திமார்.**

நிரந்தர முகவரி:
நுணாவில், சாவகச்சேரி. (U.K.) (37253) (26-14-44)


## மலசல கூடம் இல்லை

சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான மலசலகூடம் இல்லை. இதனால், இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் சிரமபபடுகின்றனர். இங்கு மலசலகூடம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளரைக் கடிதமூலம் கேட்டுள்ளது.

இதேவேளை -

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்ட முயற்சியினால் பாடசாலையைச் சுற்றி புதிதாக வேலிகள் அடைக்கப்பட்டுள்ளன என்று வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (ஐ-135)

## கைதடி நுணாவில் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.7

கைதடி நுணாவில் பகுதியில் சட்ட விரோதமாக மணல் அகழப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கைதடி நுணாவில் பூதவராயர் கோயிலுக்கும் - குச்சப்பிட்டி மயானத்திற்கும் இடைப பட்ட பகுதிகளிலேயே இந்த மணல் அகழ்வு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உவர்நீர் தடுப்பணையின் பெரும்பகுதிகளிலும் கைதடி தரவைப் பகுதியிலுமே மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதால் உவர்நீர் குடிமனைக்குள் வரும் அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

(10-202)

## வதிவிடப் பயிற்சி முகாம்

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6, தரம் 7, தரம் 8 ஆகியவற்றில் ஆங்கில மொழிமூலம் சுகாதாரமும் உடற்கல்வியும், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் யாழ்.கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளிலும் கணித பாடத்துக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

பயிற்சி முகாம் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-7)

## அதிபருக்குப் பிரியாவிடை

வலி.தென்மேற்கு,ஒக்.7

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபராகப் பத்து வருடங்கள் பணியாற்றி சங்கானை கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற நா.சண்முக சுந்தரத்திற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் இணைந்து கடந்த செவ்வாய்க் கிழமை பிரிவு உபசார வைபவம் ஒன்று நடத்தினர்.

கல்லூரி பதில் அதிபர் திருமதி க. சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் சங்கத் தலைவரும், வட்டு.இந்துக் கலலூரி அதிபருமான ச.இராமலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும பலர் கலநதுகொண்டு பாராட்டுரை வழங்கினர்.

(ஐ-135)


கிராமிய அபிவிருத்தி வங்கியின் நேர்முகத் தேர்வுக்கான இடம், திகதி மாற்றம் தொடர்பான

## அறிவித்தல்

கிராமிய அபிவிருத்தி வங்கியினால் நேர்முகத் தேர்வுக்காக இம் மாதம் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகத்தேர்வு நேரம், இடம் என்பன மாற்றப்பட்டுள்ளன. எனவே, மேற்குறிப்பிடப்பட்டவர்கள் அனைவரையும் நாளை (08-10-2004) வெள்ளிக்கிழமை நேர்முகத் தேர்வுக்காக பிரதான சாலை கிளிநொச்சியிலுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சிக் கிளைக்கு காலை 9.00 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

**பொது மேலாளர்,**
கிராமிய அபிவிருத்தி வங்கி,
மத்திய செயலகம், கிளிநொச்சி.

(C/38038)(26-14-44)


# மரண அறிவித்தல்கள்

திருமதி

## சிவசோதிலிங்கம் மகேஸ்வரி

வாகையடி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி சிவசோதிலிங்கம் மகேஸ்வரி 02.10.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசோதிலிங்கத்தின் அன்பு மனைவியும் தேவநாயகி, நற்குணதேவி, சோதிமலர், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணைவேல், பத்மநாதன், நடனசிகாமணி, தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் அப்பாச்சாமி, கதிரவேல், பூபதி ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2004) வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.*
(சி.38045)(39)

## பொன்னையா செல்லையா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற யாழ். செயலக ஊழியர் பொன்னையா செல்லையா நேற்று (06.10.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் ஏரம்பு செல்லம்மா, இராசம்மா, இராசையா (ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்), கிருஸ்ணசாமி (முன்னாள் ஊழியர், இலங்கைப் போக்குவரத்துச்சபை) மற்றும் முத்தம்மா, சரஸ்வதி, சொர்ணம் என அழைக்கப்படும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜேஸ்வரி, மாலினி (பிரான்ஸ்), பத்மினி (பிரான்ஸ்), கணேசராசா (பிரான்ஸ்), கலாராணி, உருத்திரா (பிரான்ஸ்), கமலராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதாஸ் (அரச மரக கூட்டுத்தாபனம்), மகேஸ்வரன் (பிரான்ஸ்), நிரஞ்சன் (பிரான்ஸ்), அல்லிராணி (பிரான்ஸ்), திருச்செல்வம் (யாழ் மாநகரசபை நீர்வேலைப் பகுதி), சுகந்தி (பிரான்ஸ்), திருக்குமார் (யாழ். பொதுசன நூலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான திருமதி இரத்தினம், ஓய்வுபெற்ற தபால் ஊழியர் அருளம்பலம், பூரணானந்தம் (ஆசிரியர்), தருமலிங்கம் (ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்), இராசலிங்கம் மற்றும் சரஸ்வதி (பிரான்ஸ்), ஓய்வுபெற்ற மாநகர ஆராய்ச்சி ஊழியர் சோமசுந்தரம், திருமதி சரஸ்வதி, திருமதி பராசக்தி, திருமதி நேசராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தில்லைநடராசா என அழைக்கப்படும் சோமசுந்தரம் காலஞ்சென்ற சின்னன் என்று அழைக்கப்படும் சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற காட்டுக்கந்தோர் ஊழியர்) ஆகியோரின் சகலனும் தனுஸன், யாழினி, தினேஸ், நிரோசன், பிரகாஸ், துஸாந்தன், சாளினி, ரதீஸ், சோபிகா, தனுசிகா, யதுசன், விபிசன், நிருசா, ருசித்தா, ஹரிதா, விபிதா, யசீதரன், விதுசா, சுபஸ்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.41, பாரதி வீதி, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று (07.10.2004) வியாழக் கிழமை காலை 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி செ.சின்னம்மா
(மனைவி).

*41, பாரதி வீதி,*
*கச்சேரியடி,*
*யாழ்ப்பாணம்.* (37280)(34-14-44-26)


FG WILSON

புது யுகத்திற்கான
# ஜெனரேட்டர்கள்

அதிக சக்தி செயற்திறன் உழைப்பு

உலகத்தரம் வாய்ந்த FG வில்சன் ஜெனரேட்டர்கள் அதிக சக்தியுடன் செயற்படவல்லது. அதி பாதுகாப்பு மிக்க இவ் ஜெனரேட்டர்கள்.பல வருட காலம் நீடித்து உழைக்கக்கூடியது. 6kVA-2200kVA சக்தியையும் கொண்டது அத்துடன் பிரவுன்ஸ் கம்பனியின் விற்பனைக்கு பிந்திய சேவையும். உத்தரவாதமும் இவ ஜெனரேட்டர்களை மேலும் வலுவடைய செய்து இதன் பயன்பாட்டை அதிகரிக்கின்றது.



1 வருட உத்தரவாதமும் விற்பனையின் பிந்திய 24 மணித்தியால சேவையும்.

ஏக விநியோகஸ்த்தர்கள்
பிரவுன் அன்ட் கம்பனி லிமிட்டெட்.,
481,டி.பி.ஜய மாவத்தை,கொழும்பு-10 தொலைபேசி: 2663270,26632721 [illegible]: 4721444
மின்னஞ்சல்: psd@brownsgroup.com இணையத்தளம்: www.brownsgroup.com

## உதயன்

# ஆப்புவைத்தவர் இப்போது ஆக்கபூர்வமான வழியில்!

'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பார்கள். காற்று அடங்கும் வரை காத்திருந்துவிட்டு, இப்போது காற்றுக்காகக் காத்திருப்பதில் அர்த்தமில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு ஒன்றை எட்ட வேண்டுமானால் முதலில் தென்னிலங்கை அரசியல் தலைமையில் ஓர் இணக்கப்பாடு வரவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த மாவீரர் தினத்தில் உரையாற்றியிருந்தார். அதை மேற்கோள் காட்டி, இணக்கப்பாட்டுக்கு வாருங்கள் என்று இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்ததை நேற்று இப்பத்தியில் சுட்டிக் காட்டியிருந்தோம்.

தாம் அமைக்கும் 'சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலின்' அங்குரார்ப்பணக் கூட்டத்திலேயே இந்த அழைப்பை ஜனாதிபதி விடுத்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அழைப்பை நோக்கும்போது, காற்று அடங்கும் வரை வாளாவிருந்துவிட்டு, இப்போது தூற்றுவதற்குக் காற்றில்லை என்று இறைஞ்சும் வேலை தான் நினைவுக் வருகின்றது.

தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியது போல ஆளும்கட்சி சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதும், ஆட்சி - அதிகாரத்தில் கண்வைக்கும் எதிர்க்கட்சி அந்த முயற்சிகளைக் குழப்புவதுமான துன்பியல் நாடகம் தான் கடந்த ஐம்பது வருடங்களாகத் தென்னிலங்கையில் அரங்கேறி வந்திருக்கின்றது.

அந்த நிலையை மாற்றுவது குறித்து ஜனாதிபதி இப்போது பேசுகின்றார். அதுவும் அந்த நிலையை முற்றிலும் மாற்றியமைப்பதற்கான பொன்னான வாய்ப்பு 2002-2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டுக்குக் கிடைத்தபோது, அதை உதறித்தள்ளி, உதாசீனம் செய்து, குழப்பி அடித்துவிட்டு, இப்போது அதற்காக அழைப்பு விடுக்கிறார் அம்மணி.

நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் முக்கியமான விடயங்கள் இரண்டு.

ஒன்று - நிறைவேற்று அதிகாரம்.

மற்றது - சட்டமாக்கல் அதிகாரம் உட்பட நாடாளுமன்ற அரசு அதிகாரம்.

இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளிடமும் இவற்றில் ஒவ்வொன்று கைவசம் இருக்கும் வரலாற்று நிகழ்வு, தற்போதைய அரசமைப்பு நடைமுறைக்கு வந்து இந்த இருபத்தியாறு ஆண்டுகாலத்தில் கடந்த தடவைதான் வநதது. அதைக்கூட இரண்டு வருடகாலத்துக்கு மேல நீடிக்கவிடாமல் அப்போது ஆட்சியிலிருந்த அரசை வீட்டுக்கு அனுப்பியதன் மூலம் குழப்பியடித்தார் ஜனாதிபதி குமாரதுங்க.

தென்னிலங்கையின் இருபெரும் அரசியல் கட்சிகளும் தங்களுக்குள் இணக்கம் கண்டு, ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு மிகவும் உகந்த - வாய்ப்பான - சாதகமான - காலகட்டம் அதுதான்.

இணக்கம் காணவேண்டிய அந்தக் காலகட்டத்தில் நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிப்பதற்காகப் பேரினவாதத்துக்கு ஒத்து ஊதினார் ஜனாதிபதி. அப்போது ரணிலின் அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் சிங்களக் கடும் தீவிரவாதப் போக்கைக் கொட்டினார்.

அப்போது ஆட்சிக்கு வந்த கையோடு, அதுவரை பேரழிவுகளைத் தந்து கொண்டிருந்த கொடூர யுத்தத்தை முற்றாக நிறுத்துவதை அவசர அவசரமாகச் செய்யவேண்டிய பொறுப்பும், கடப்பாடும் புதிதாகப் பதவியேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்தது.

இப்போது, இணங்கிப்போவது குறித்தும் - இசைந்து செயறபடுவது பற்றியும் - போதி சத்துவர் போலப் போதிகும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அப்போது இதேபாணியில் நடந்திருப்பாரேயானால் யுத்த நிறுத்தத்திற்கான உடன்பாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனித்துச் செய்யவேண்டிய நிலைமை வந்திருக்காது.

ரணிலின் அரசு அமைதி முயற்சிகளை முன்னெடுத்த சமயம் அதற்கு எதிராக 'நோண்டல்' கருத்துக்களைக் கூறி, தென்னிலங்கையில் அமைதி முயற்சிகளுக்கு எதிராகச் செயற்படும் சக்திகளை ஊதி ஊக்கப்படுத்தி - தட்டிக் கொடுத்து - அந்த நன்முயற்சிகளையே குட்டிச்சுவராக்கிய ஜனாதிபதி, இப்போது 'தென்னிலங்கையில் இணக்கப்பாடு' என்ற தத்துவம் குறித்துப் பேசுவது 'சாத்தான் வேதம் ஓதுவது' போல உள்ளது.

அமைதி முயற்சிகளுக்கு அப்போது அவர் ஆப்பு வைத்தார் என்றாலும் இப்போது ஆக்கபூர்வமான வழிமுறை பற்றி அவர் பேசுகிறார்.

அவர் கூறுவது போல அமைதி முயற்சிகள் பிரயோசனமாவதற்கு முதலில் தெற்கில் அது தொடர்பாக ஓர் இணக்கப்பாடு வருவது அவசியம்.

ஜனாதிபதியின் அமைதி முயற்சிகளுக்கு குறுக்கே நிற்கமாட்டோம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. அறிவித்துவிட்டது. அதன் இன்றைய நிலைப்பாடும் அதுதான்.

எனவே, தெற்கில் ஐக்கிய நிலையும் உணர்வும் வருவதற்கு தனது பக்கத்தில் உள்ள ஜே.வி.பி. போன்ற பேரினவாதிகளைத்தான் ஜனாதிபதி முதலில் சரிப்படுத்த வேண்டும். அது அவரால் இயலும் என்று நம்புவதற்கு எந்த ஓர் ஏதுவும் தென்படவில்லையே!

# இறக்குமதி செய்யப்பட்ட அரிசி நேற்று முதல் குறைந்த விலையில்

## மேலும் ஒரு தொகுதி அரிசி இந்தியாவிலிருந்து வருகிறது

கொழும்பு,ஒக்.7

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள 5 ஆயிரம் மெற்றிக் தொன அரிசி குறைந்த விலையில் சந்தைக்கு விடப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்தவே இந்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

உள்ளூரில் அரிசித்தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டதன் காரணமாக அரசு இந்தியாவிலிருந்தும், பாகிஸ்தானிலிருந்தும் அரிசியை இறக்குதி செய்யத் தீர்மானித்திருந்தது.

முதற்கட்டமாக பாகிஸ்தானிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த அரிசி உடனடியாகக் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நேற்றுப் புதன்கிழமை சந்தைக்கு விடபட்டிருக்கின்றது.

பாஸமதி அரிசியும், வெள்ளைப் பச்சை அரிசியுமே இறக்குமதி செய்யப்பட்டுள் என. வெள்ளைப்பச்சை அரிசி கிலோ 29 ரூபா வீதமும் பாஸ்மதி அரிசி கிலோ 40 ரூபா வீதமும் சந்தையில் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அறிவித்துள்ளது.

அரசின் 20 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்யும் திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து ஒரு தொகுதி அரிசி அடுத்து சில தினங்களில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சிவப்பரிசியும், பொன்னிச் சம்பாவும் அடங்கியுள்ளதாகவும் இவை முதற்கட்டமாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மூலம் சந்தைக்கு விடப்படுமெனவும் - அடுத்துவரும் அரிசி தனியார் துறையினருக்கு வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. (8)

# யுத்தம் ஒன்று வருமானால் புலிகள் விட்டுக்கொடுக்கப் போவதில்லை

## மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் உறுதி

வலி.வடக்கு,ஒக்.7

எதிர்காலத்தில் ஒரு யுத்தம் வருமானால் எமது தலைமையோ போராளிகளோ விட்டுக்கொடுக்கப்போவதில்லை. எமது மக்களின் விடயத்தில் இன்று இந்தியா ஒன்றைக் கூறுகின்றது, அமெரிக்கா ஒன்றைக கூறுகின்றது. இத்தகைய செயல்கள் யாவும எம்மீது இரக்கம் காட்டுவதைப் போனறு காட்சிதருகின்றன. ஆனால், உரிய காலம் வரும்போதே உண்மை நிலைமையை புரிய முடியும்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ மாவீரர் துயிலும் இல்லப பொறுப்பாளர் பொன்.தியாகம் குறிப்பிட்டார்.

இந்தியாவின் சதியினால் வீரமரணத்தைத தழுவிக்கொண்ட குமரப்பா, புலேந்திரன் உட்படப் பன்னிரு வேங்கைகள் உயிர்நீத்த 17ஆவது நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் பன்னிரு வேங்கைகளின உடலகள் தீயில் சங்கமமான தீருவிலில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப்பொறுப்பாளர் பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்றன.

தொடர்ந்து உரையாற்றிய பொன்தியாகம் கடந்த காலத்தில் இடம்பெற்ற சண்டையின் போது இந்தியா, அமெரிக்கா போன்ற அரசுகள் மறைமுகமாக இலங்கைக்கு உதவிகளைச் செய்துள்ளார்கள்.

உலகில் விடுதலைபெற்ற அனைத்து நாடுகளும் இழப்புக்களையும் துன்பங்களையும் சுமந்தே தமது விடுதலைகளைப் பெற்றுள்ளன. இந்தவகையில் நாமும் வீடு வாசலகள், உயிர்கள், சொத்துக்கள் என்று பலவற்றையும் இழந்துள்ளோம். தென்னிலங்கை மக்களும் அரசியல் வாதிகளும் இன்று குழம்பிப்போய் உள்ளார்கள், நாளுக்கு நாள் நிமிடத்திற்கு நிமிடம் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் ஜனாதிபதியும் ஏதேதோ கூறிக் குழபபிக்கொண்டே இருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில் மிகவும் தெளிவாகக் கொள்கைப் பற்றுறுதியுடன் இருக்கின்றோம்.

மாவீரர்களின் வாழ்க்கைத் திட்டதை நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் அனைவரும் வாழவேண்டிய வயதிலேயே மாவீரர்கள் ஆகியுள்ளார்கள். இவர்கள் மாவீரர்களாகியது இம்மண்ணும் மக்களும் நிம்மதியாக விடுதலைபெற்று சுதந்திரக் காற்றை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே ஆகும்.

மாவீரர்களுடைய நினைவு நாள்கள் என்பது ஒருவிழா அல்ல. இவைகள் ஒரு மீட்டல் வகுப்புக்களாகும் அதாவது பழைய சரித்திரங்களை, வரலாறுகளை எமது நெஞ்சங்கள் நினைவுகூர்ந்து மீட்டுக்கொளவதினால் அவர்களுடைய நினைவுகளை ஒருங்கு கூருகின்றோம்.

வருங்காலச் சந்ததியினருக்கு எமது வரலாற்றை எடுத்துக்கூறி எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலின் கீழ் கொள்கை உறுதியுடன் செயற்படவேண்டும். மாவீரர்களின் கொள்கையை பின்பற்றிச்சென்று அதன் இலக்கை அடைய நாம் அனைவரும் பாடுபடவேண்டும் என்று கூறினார்.

மற்றும் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, ஆசிரியர் குமாரவேல் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ப-86)

## நீர் விநியோகம் சீரடைந்தது

வலி.வடக்கு,ஒக்.7

கடந்த நான்கு நாள்களாக யாழ். மாநகரசபைப் பகுதிக்கு உட்பட்ட கடற்கரைப் பிரதேசங்களில் துண்டிக்கப்பட்டு இருந்த நீர் விநியோகம் நேற்றுமுதல் சீரானது.

கடந்த சனிக்கிழமை நீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட பழுது காரணமாக நீர் விநியோகம் கடற்கரைப் பிரதேசங்களில் துண்டிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத் தக்கது.

யாழ். மாநகரசபை ஊழியர்களிடையே காணப்பட்ட அசிரத்தையும் அவர்களிடையேயான குழப்பமுமே மீள நீர் விநியோக ஒழுங்குகளை மேற்கொள்வதற்குத் தாமதமாகின என்று சொல்லப்படுகிறது

ஏற்கனவே, இத்தகைய பழுதுகள் ஏறபட்ட போதிலும் 24 மணிநேரத்தில் நீர் விநியோகம் சீர்செய்யப்படுவது வழக்கம் என்றும் -

ஆனால், இம்முறை ஊழியர்களின் அசிரத்தையினாலேயே தாமதம் ஏற்பட்டது என்றும் நீர் விநியோகப் பகுதியைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (10-86)

### நாளை

புரட்டாதி 22
வெள்ளிக்கிழமை
(08.10.2004)
திதி : தசமி
நட்சத்திரம் : பூசம்
முன்னிரவு 09.38
சுபநேரம்: 06.02 - 07.32
ராகுகாலம்: 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

# தவறவிடப்பட்ட தாலிக்கொடியை கண்டெடுத்து மாணவன் ஒப்படைப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.7

தவறவிடப்பட்ட ஐந்து பவுண் தாலிக்கொடியினை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வீதியில் கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்தார்.

கல்வியங்காடு, டச்சுவீதியில் வசிக்கும் தி.பிறேமாதேவி என்ற பெண்ணின் தாலிக்கொடி கடந்த சனிக்கிழமை வீதியில் தவறிவிழுந்துவிட்டது.

அப்பெண்மணி கல்வியங்காடு கிராம சேவையாளர் சு.முத்துக்குமாரசாமியிடம் இதுபற்றி முறைப்பாடு செய்திருந்தார்.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவனான அதேயிடத்தைச் சேர்ந்த துரைராசா நிரோஜன் தான் ஒரு தாலிக்கொடியை வீதியில் கண்டெடுத்ததாக ஏற்கனவே கிராம சேவையாளரிடம் தகவல் கொடுத்திருந்தார்.

கிராம சேவையாளர் இருதரப்பினரையும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தனது அலுவலகத்துக்கு அழைத்து தாலிக்கொடியை உரியவரிடம் ஒப்படைத்ததுடன் பல்கலைக்கழக மாணவனையும் பாராட்டினார். (10-180)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கருத்தரங்கும் செயலமர்வும்

யாழ்ப்பாணம்,ஒக்.7

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரை "சைவ சித்தாந்தத்தின் அடிப்படை அம்சங்கள்" என்னும் பொருளிலும் -

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் "பண்ணிசை திருமுறைகளின் முக்கியத்துவம் - சமயகுரவர்கள்" என்ற தலைப்பிலும் -

திருவாவடுதுறை ஆதீன சமயப் பிரசாரகர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் "இந்து சமய விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள்" என்ற பொருளிலும் - கருத்துரை நிகழ்த்துவார்கள்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் அடுத்த கட்ட நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப் புலவர் கந்த.சத்தியதாசன் "இலங்கையில் சைவ சமய மறுமலர்ச்சி" என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார். தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கு.சண்முகநாதன் அறநெறிக்கல்வி கற்பித்தல் முறைகள்பற்றிய பயிற்சியை வழங்குவார். (10-204)

### உதயவாக்கு

'நான்' என்று தனித்தன்மையுடன் இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; ஆனால், 'நான் தான்' என இறுமாப்புடன் இருப்பதை விட்டுவிடுங்கள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## வாடகைக்கு

273, கே.கே.எஸ். வீதியில் அமைந்த கடை வாடகைக்கு விடப்படும். தேவையானோர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு:திருமதி க.மங்கையர்க்கரசி, 320, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 4590516. (37166)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974இல் பிறந்த, விசாக நட்சத்திரமும், 4ஆம் பாதம், 2இல் செவ்வாய் மொத்தக் கிரக பாவம் 55½, கனடாவில் கம்பியூட்டர் சயன்ஸ் கல்விகற்றுத் தற்போது கொழும்பில் Computer Programmer ஆக வேலை செய்யும் மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 235/13, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (37199)

## விற்பனைக்கு

3 ஆம் கட்டை, ஆனைக்கோட்டையில் 06 பரப்புக் காணி வீட்டுடன் எட்டு அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் காரைநகர் பிரதான வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.பாலசிங்கம், குமரபதி, கந்தரோடை, சுன்னாகம்.T.P.:0777159556. (37268)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## கோழிகள் விற்பனைக்கு

முட்டை இடும் 1000 கோழிகள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
126, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P. 0776120070 (37207)(35)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கந்தர்மடம், இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கையில் பல்கலைக்கழகம், பேபி ஸ்ரூடியோ, இந்துமகளிர் கல்லூரி சுற்றாடலில் மேல்மாடி வீட்டுடன் இரண்டு (02) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: K.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, T.P.: 077 6125140. (37273)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் 02 பரப்பு 1 குழி காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P.: 0776125140. (37272)

## போட்டோபிரதி சேவை

எமது நிறுவனத்தில் 01.10.2004 தொடக்கம் சிறந்த முறையில் தெளிவான போட்டோ பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2573
(C/38027)(42)

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.

**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna.
Phone: 0773068968.
(சி-37511)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கில், பலாலி வீதிக்கு அருகில் அக்குபஞ்சர் வைத்திய நிலையத்தின் அருகாகச் செல்லும் மடத்தடி ஒழுங்கையில் 2 அறை கொண்ட வீடு, கிணற்றுடன் கூடிய 4¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கூடிய விலை தருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:
இராசையா பாலசுப்பிரமணியம் (சுப்புறுமாமா)
உரும்பிராய் வடக்கு.
அல்லது
இரா.ஜெயக்குமார் (ஆசிரியர்)
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.
(சி-38011)


## ஒன்பதாம் ஆண்டு நினைவு நீடில்



அமரர் **தம்பையா தாமோதரம்பிள்ளை**

("இராசம்ஸ்", தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ் ஸ்தாபகர்)

மலர்வு
17-10-1922

உதிர்வு
07-10-1995

**திதி: 27.09.2004**

கவ்விக்கொண்டு ஓடி நாள்கள் ~ இங்கு
கரையினும் ஒன்பது ஆண்டாய்
எவ்விதம் மறப்போம் நாங்கள் ~ எங்கள்
இதயத்தின் துடிப்பாய் நீங்கள்
ஒவ்வொரு கணமும் அப்பா! உங்கள்
ஒளி தவழ் முகமும் அன்பும்
செவ்வையாய் உள் இருந்து ~ எம்மைச்
செயல் செய ஆண்டு கோடி.

டச் வீதி,
சாவகச்சேரி.
(37267)(39-34-13)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வைத்தியசாலையில் தங்கியிருந்த வேளையில்

# கைப்பையில் வைத்திருந்த தங்கத்தாலி போலியாக மாறியது எவ்வாறு?

யாழ்ப்பாணம்,ஒக்.7

வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றபோது கைப்பையில் கழற்றி வைக்கப்பட்ட தங்கத் தாலிக்கொடி வீட்டில் சென்று எடுத்தபோது போலித் தாலிக்கொடியாகக் ('கிலிட்') காணப்பட்டது.

ஆவரங்காலைச்சேர்ந்த கஜேந்திரன் அருட்பராசக்தி (வயது 39) என்பவருக்கே இந்த அதிர்ச்சியூட்டும் அனுபவம் ஏற்பட்டது.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பரிசாரகராகப் பணிபுரியும் இவர் தனது பிரசவத்திற்காகக் கடந்த 27ஆம் திகதி யாழ். போதனாவைத்தியசாலை பிரசவ விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். விடுதியில் தங்கிய இவர் தனது ஆறரைப் பவுண் தங்கத் தாலிக் கொடியைக் கழற்றிப் பத்திரமாகத் தன்னுடன் இருந்த கைப்பையில் வைத்திருந்தார்.

கடந்த 30 ஆம் திகதி இவருக்குச் சத்திர சிகிச்சை மூலம் பிரசவம் நிகழ இருந்ததால் அன்றைய தினம் கைப்பையுடன் தாலிக்கொடியைத் தன் கணவரிடம் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

வீட்டிற்கு அதை எடுத்துச்சென்ற கணவன் தாலிக்கொடியை வெளியே எடுத்தவேளை அது வெறும் கொடியாக மட்டும் இருந்ததால் (தாலியில் இருக்கும் காசு இல்லாததால்) சந்தேகப்பட்டு பரிசோதித்துப் பார்த்தபோது அது ஒரு போலிக்கொடி எனத் தெரியவந்தது.

இதுபற்றி யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அறிவித்ததுடன், யாழ். பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார். (10-15)

## மோ.சைக்கிள்கள் பொலீஸ் நிலையத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு நுழைவாயிலுக்கு முன்பாகவுள்ள வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் யாவும் யாழ். பொலீஸாரால் பொலீஸ் நிலையத்திறகு எடுத்துச் செலலப்பட்டன.

வெளிநோயாளர் பிரிவு நுழைவாயில் ஊடாக நோயாளர், வாகனங்கள் நுழைய முடியாதவாறு வீதியின் குறுக்காகப் பாதையைத் தடை செய்தவாறு நிறுத்தப்பட்ட காரணத்திற்காகவே பொலீஸார் மோட்டார்சைக்கிள்களைப் பொலீஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர். (8-15)

## முன்மொழிவுகள் அனுப்பிவைப்பு

தென்மராட்சி,ஒக்.7

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக 35 லட்சம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களின் முன்மொழிவுகள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதியில் உள்ளூராட்சி வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 3 வீதிகள் புனரமைக்க 20 லட்சம் ரூபாவுக்கான மதிப்பீடும் -

சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி வைத்தியசாலைச் சந்தியிலிருந்து கண்டி வீதி வழியாகத் தனங்களப்பு வீதிவரை வடிகால் அமைப்பதற்கு 5 லட்சம் ரூபாவுக்கான மதிப்பீடும் -

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைத்திட்டத்தில் சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் திறந்த கொட்டகை அமைக்கவென 10 லட்சம் ரூபாவுக்கான மதிப்பீடும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (10-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2004

செல்வி **லக்ஷி பாலசிங்கம்**
யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை
(புள்ளிகள் 133)

செல்வன் **ராஜ்குமார் அனோஜன்**
யா/நல்லூர்ஞானோதயா வித்தியாலயம்
(புள்ளிகள் 130)

யா/கல்வியங்காடு இ.த.க. பாடசாலையில் கல்விபயிலும் மேலும் சித்தியடைந்த த.ஆர்த்திகா (127 புள்ளிகள்), சு.சுவஸ்திகா (127புள்ளிகள்) ஆகியோரை வாழ்த்துவதோடு அறிவூட்டி நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊர்மிளா ஸ்ரூடியோ அன் வீடியோ,
3ஆம் கட்டை, கல்வியங்காடு.
T.P.: 6587 (சி-38037) (26-34-13-46)

பொ.இராஜேஸ்வரன்,
நிர்வாகி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய மாணவி
செல்வி **மு.கிருத்திகா**

2004 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு இவரை வாழ்த்துவதோடு இவரை வழிப்படுத்தி, நெறிப்படுத்திய அனைவருக்கும் பாராட்டைத் தெரிவித்து இவர் மேலும் உயர்வடைய இறைவன் அருள்புரிவாராக என வேண்டுகிறோம்.

பருத்தித்துறை வீதி,
குடமியன், வரணி.
(37266)(34-13-46)

- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

தீவக கல்வி அலுவலகத்தின் பிரதம எழுதுநர்
திரு.க.பூபாலபிள்ளை அவர்களின் அன்புத் தாயார்
**அமரர் கணபதிப்பிள்ளை தெய்வானை**


அவர்கள் 13.09.2004 அன்று மட்டக்களப்பில் காலமாகியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தீவகம்,
வேலணை. (37247)(42-34-13-46)

- தீவக கல்வி வலய நலன்புரிக் கழகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி வைரமுத்து தங்கம்மா



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கீரிமலையை வசிப்பிடமாகவும் தற்பொழுது சுன்னாகத்தில் வசித்துவந்தவருமாகிய திருமதி வைரமுத்து தங்கம்மா அவர்கள் 04.10.2004 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டி வைரமுத்துவின் அன்பு மனைவியும் திருமதி பானுமதி, திருமதி ரோகினி (கனடா), காலஞ்சென்ற சூரியகுமார், திருமதி உதயராணி, சாந்தகுமார் (ரகு - கனடா) ஆகியோரின் பாசம் நிறைந்த தாயாரும் கருணைநாயகம் (கருணா கல்வி நிலையம்), பாலகிருஷ்ணன் (கனடா), Dr.ராஜஜேன் (M.B.B.S., களுபோவில வைத்தியசாலை), திருமதி தனுஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியங்கா (கொழும்பு), லக்ஷனா (கனடா), ஜெரூஷன் (கனடா), கர்ணிகா (கனடா) ஆகியோரின் பிரியமான பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (09.10.2004) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் அக்கினியில் அர்ப்பணஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு.கருணைநாயகம்
(கருணா மாஸ்ரர்), மக்கள், மருமக்கள்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (37264)(34-13-46)

# வீரமணி ஐயர் நினைவாகப் பேருரை கல்வியியற் கல்லூரியில் வருடாந்தம் நடைபெறும்

## முதலாவது பேருரையைப் பேராசிரியர் சிவத்தம்பி நிகழ்த்துவார்



யாழ்ப்பாணம்,ஒக்.7

'இயலிசை வாரிதி', 'மகாவித்துவான்' இணுவில் ந.வீரமணி ஐயர் நினைவுப் பேருரை நிகழ்வை வருடாவருடம் நடத்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முடிவுசெய்துள்ளது.

கலைத்துறையில் அளப்பரிய சாதனைகள் புரிநத வீரமணி ஐயரைக் கௌரவிக்கும் வகையில் அவரது பிறந்ததினமான ஒக்ரோபர் 15 ஆம் திகதியை ஒட்டியதாக இந்த நினைவுப் பேருரையை நடத்த கல்வியியற் கல்லூரி முடிவுசெய்துள்ளது.

இந்த முடிவுக்கமைய இவ்வாண்டுக்கான நினைவுப் பேருரை எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குக் கல்லூரியில் இடம்பெறவிருக்கின்றது.

கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் 'சாகித்திய ரத்ன' கா.சிவத்தம்பி நினைவுப் பேருரையாற்றவிருக்கின்றார்.



"அழகியல் கல்வியும் ஆளுமையும் சமூகநிலை நின்ற ஒரு நோக்கு" என்னும் தலைப்பில் பேராசிரியர் கா. சிவத்தம்பி நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு.திருமுருகன் நினைவு அஞ்சலியுரை நிகழ்த்தவிருக்கின்றார். (அ-3)

# குடாநாட்டிலுள்ள 'றிசேவ்' பொலீஸாருக்கு மூன்று வருடங்களாக இடமாற்றமில்லை

தென்மராட்சி,ஒக்.7

யாழ். மாவட்டப் பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றும் 'றிசேவ்' பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் கிடைக்காமையால் மூன்று வருடங்களுக்கு மேலாக இங்கு கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணப் பொலீஸ் நிலையங்களில் ஒரு வருடத்திற்குக் கட்டாய இடமாற்றம் செய்யப்படுகின்ற போதிலும், நிரந்தர பொலீஸ் சேவையில் உள்ள பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு ஒரு வருடத்தில் இடமாற்றல் வழங்கப்படுவதாகவும் -

'றிசேவ்' பொலீஸ் படையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மூன்று வருடங்களுக்கு மேலாக யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுகின்றபோதிலும், இடமாற்றம் வழங்கப்படவில்லை எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், பொலீஸ்மா அதிபர் ஆகியோருக்கு முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (10-117)

# குப்பிவிளக்குத் தவறி விழுந்து தீப்பற்றியதால் சிறுமி மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

குப்பிவிளக்குத் தவறிவிழுந்து தீப்பற்றியதில் 5 வயதுச் சிறுமி ஒருத்தி உயிரிழந்தார். அவரின் தாய் தீயில் எரிந்து படுகாயமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு 7.15 மணிக்கு வட்டக்கச்சியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் திவாகரன் ஜனனி (வயது 5) என்பவரே உயிரிழந்தவராவார். தாயார் திவாகரன் புஸ்பராணி (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். மாற்றப்பட்ட சிலமணி நேரத்தில் சிறுமி உயிரிழந்தார். சடலம் மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தாய் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (10-15)

# இதழியல் டிப்ளோமா கற்கை நெறி எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பம்

'யுனெஸ்கோ' அனுசரணையுடன், டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்காகத் திட்டமிட்டுள்ள இதழியல் டிப்ளோமா கற்கைநெறியை நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தொடக்கிவைப்பார். இலங்கையின் மூத்த தமிழ்ப் பேரறிஞரான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தொடக்கவுரை நிகழ்த்துவார்.

யாழ். சிற்றிஹேரலில் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் பற்றி யாழ். பத்திரிகையாளர்களுக்குத் தொடர்ச்சியான பயிற்சியை வழங்கவும் தேவையான வளங்களைத் தொகுத்து வழங்கவும் இயங்கிவருகிறது. இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான பாடத்திட்டங்கள் நிபுணர்கள் துணையுடன் தயாரிக்கப்பட்டு யாழ். பல்கலைக்கழக மூதவையின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 2006 ஆம் ஆண்டு மார்ச்வரை இந்த இதழியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான வகுப்புகள் நடைபெறும். பத்திரிகையாளர்களின் வசதிக்கேற்ப சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இந்த வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கற்கை நெறிக்கான வகுப்புகளை நடத்த கொழும்பில் இருந்தும் தென்னிந்தியாவில் இருந்தும் மூத்த பத்திரிகையாளர்களும் பத்திரிகைக் கல்வியாளர்களும் வரவழைக்கப்படவுள்ளனர்.

இந்த டிப்ளோமாவில் பயில்வதற்கென வடபகுதியைச் சேர்ந்த பத்திரிகைத் துறையோடு தொடர்புடைய 20 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கற்றுக்கொண்ட விடயங்களைக் கொழும்பு மற்றும் தென்னிந்திய நகரங்களில் இருந்து வெளியாகும் பத்திரிகை நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று பயிற்சி பெறவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.(8)

# யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் மாணவர் ஆய்வாளர் விருது

## போட்டிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் மாணவர்களுக்கான ஆய்வாளர் விருதுகளை (Student Research Award) வழங்கிக் கௌரவிக்க உள்ளது.

வருடாந்தம் நடைபெறும் மாணவர்களுக்கான ஆய்வாளர் விருதுப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்கள் இதில் பங்குபற்றமுடியும் என விஞ்ஞானச் சங்கச் செயலாளரும் இரசாயனவியல் விரிவுரையாளருமான கலாநிதி ஜெ.பிறின்ஸ் ஜெயதேவன் அறிவித்துள்ளார்.

மாணவர் ஆய்வாளர் விருதுப் போட்டி பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், கணிதவியல் போன்ற நான்கு துறைகளிலும் தனித்தனியாக நடைபெறும்.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாவது இடத்தைப் பெறுபவர்களுக்குப் பணப்பரிசுடன் வெற்றிக் கேடயமும் சான்றிதழும் வழங்கப்படும்.

திறமையாக ஆராய்ச்சி மேற்கொண்ட முதல் 20 மாணவர்களுக்குச் சிறப்புச் சான்றிதழ்களும், ஆர்வமுடன் பங்குபற்றி உரிய தராதரத்தை அடைந்த அனைத்து மாணவர்களிற்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் வழங்கப்படும்.

வடபகுதியில் உள்ள பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவர்களை இப்போட்டியில் பங்குகொள்ளச் செய்ய சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும், அதிபர்களும், கல்வி வலயப் பணிப்பாளர்களும் உரிய கவனம் செலுத்தவேண்டும் என விஞ்ஞானச் சங்கச் செயலாளர் ஜெ.பிறின்ஸ் ஜெயதேவன் மேலும் தெரிவித்தார். (8-185)

# அதிபர் பதவிகள் வெற்றிடம்

வலி.தெற்கு,ஒக்.7

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட வட்டுக்கோட்டை துணைவி அ.மி.த.க.பாடசாலை, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை, சுதுமலை அ.த.க. பாடசாலை, வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I, வகுப்பு 2-II ஆகிய தரங்களையுடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பாக வலிகாமம் கல்வி அலுவலகத்திற்கு விண்ணப்பங்கள் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

கல்வி வலயத்தில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய விண்ணப்பங்கள் முறைப்படி பூர்த்திசெய்து சமர்ப்பிக்கப்படவேண்டும். (ஐ-152)

# குறுகியகால விவசாயப் பயிற்சி

வலி.தெற்கு,ஒக்.7

மருதனார்மடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் குறுகிய கால விவசாயப் பயிற்சிநெறிகளில் கலந்துகொண்டு பயிற்சி நெறியைப் பின்பற்ற விரும்புபவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.

விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ள விரும்பும் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்ற 17 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்பயிற்சி நெறியில் சேர்ந்துகொள்ளலாம்.

பயிர் வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பூங்கனியியல், விவசாயத் தத்துவங்கள் போன்ற துறைகளை உள்ளடக்கிய நான்கு மாத இலவச பயிற்சி நெறிகளாக நடத்தப்படவுள்ள இப பயிற்சிகளில் கலந்துகொள்பவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் உதவு தொகைகளும் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

நேர்முகப்பரீட்சைக்கு வருபவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள், கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரம் உட்பட வேறும் இருநற்சாட்சிப் பத்திரங்களுடன் வருகைதர வேண்டும் என மேற்படி நிறுவனத்தின் அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-152-204)




# கைதடி முதியோர் இல்லத்தின் பொன்விழா நிகழ்வுகள் இன்று

## கலைநிகழ்வுகளும் இடம்பெறும்

தென்மராட்சி,ஒக்.7

கைதடி முதியோர் இல்லத்தின் 50ஆவது ஆண்டு பொன்விழாவும் முதியோர் தின விழாவும் பொன்விழா நூல் வெளியீடும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கைதடி முதியோர் இல்ல மண்டபத்தில் நடைபெறும்.


இல்ல அத்தியட்சகர் கே.வி.சிவனேசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியக் கலாநிதி திருமதி கணேசமூர்த்தி ஆகியோரும் கலந்துகொள்வர்.

சிறப்புரைகளைக் கோப்பாய்ப் பிரதேச செயலகக் கணக்காளர் திருமதி ம.வசந்தமாலாவும், சாவகச்சேரிப் பங்குத்தந்தை அருட்திரு. ரவிசந்திரன் அடிகளாரும் நிகழ்த்துவார்கள்.

தொடர்ந்து பொன்விழா மலரைச் சாவகச்சேரிப் பிரதேச செயலகக் கணக்காளர் கில்பர்ட்குணம் வெளியிட்டுவைக்க, முதற்பிரதியை யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பெற்றுக்கொள்வார்.

தொடர்ந்து முதியோர் விளையாட்டுப் போட்டிச் சேவைப் பணிகளில் பங்குகொண்டோருக்கான பரிசு வழங்கப்படும்.

கலைநிகழ்வுகளாக வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் "பவளக்கொடி" என்னும் இசை நாடகமும், திருமறைக் கலாமன்றத்தினரின் 'வீமனின் உறுதி' என்னும் முதியோர் பங்கேற்கும் நாடகமும் இடம்பெறும். (ஐ-31-117-204)



கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் போது ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது.

**சமய அறிவுப் போட்டியில் விசேட சித்திபெற்ற மாணவன் சி.வக்சலனுக்குப் பரிபாலன சபையின் செயலாளர் இ.இரத்தினதாசன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். ஸ்ரீகணேசா சனசமூக நிலையத் தலைவர் த.விஸ்வநாதனும் படத்தில் உள்ளார். (10-204)**

# வௌவால்களை வேட்டையாடி இறைச்சி விற்பனை மும்முரம்

கோப்பாய்,ஒக்.7

கோப்பாய், உரும்பிராய், நீர்வேலிப் பகுதிகளில் இரவு வேளைகளில் பெருமளவில் வௌவால்கள் வேட்டையாடப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மிகவும் அமோகமான முறையில் இரக்சியமாக நடைபெற்றுவரும் இந்த வியாபாரம் எதிர்காலத்தில் வௌவால் இனத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கி விடுமென விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வௌவால் இறைச்சி சில நோய்களைத் தீர்க்கும் இயல்பு கொண்டதெனத் தெரிவித்தே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (ஐ-72)

# வலி.கிழக்கு பிரதேச சபைப் பிரிவில் 14 வீதிகள் செப்பனிடப்படும்

கோப்பாய்,ஒக்.7

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட 14 வீதிகள் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா வீதி, அச்செழு பரப்பலம் வீதி, நீர்வேலி மோதிரக்கேணி வீதி, சிறுப்பிட்டி மடத்தடி நாதன் வீதி, புத்தூர் நிலாவரை ஞானவைரவர் வீதி, ஆவரங்கால் வன்னியசிங்கம், வீதி, நீர்வேலி சிவசக்தி பண்ணை வீதி, இருபாலை மடத்தடி கிராம வீதி, ஆவரங்கால் சந்தை ஒழுங்கை வீதி, ஆவரங்கால் நெல்லியோடை வீதி, ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூகநிலைய வீதி, வாதரவத்தை பிள்ளையார் வீதி, கல்வியங்காடு புதிய செம்மணி வீதி, கட்டப்பிராய் அம்மன் கோயில் வீதி, ஆகிய வீதிகளே யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சிபார்சு செய்த நிதியில் இருந்து செப்பனிடப்படவுள்ளன என்று பிரதேச சபையின் செயலர் கே.இராஜதுரை தெரிவித்தார்.

(ஐ-72)

**Diploma in Hardware Engineering**

காலம் : 4 மாதம்



12 ஆண்டுகளாக கணினி மென்பொருள் கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த நாம் தற்பொழுது Hardware Technology துறையில் ஒரு முழுமையான தொழில்சார் டிப்ளோமா பாடநெறி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

விபரங்களுக்கு

**ASIAN COMPUTERS**

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

✆ 021-222 5677

# மாங்குளம் விபத்தில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

கடந்த மாதம் மாங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் படுகாயமடைந்திருந்த ஒருவர் சிகிச்சை பலனளிக்காது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் தவக்குமார் (வயது 28) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த மாதம் வவுனியாவில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்தபோது மாங்குளம் பகுதியில் விபத்துக்குள்ளானார் என்று கூறப்பட்டது.

கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டிருந்தார். எனினும் அவர் சிகிச்சை பலனளிக்காது செவ்வாய்க்கிழமை இரவு உயிரிழந்தார். இவர் அண்மையில்தான் வெளிநாட்டில் இருந்து வந்தார் என்று கூறப்பட்டது.

(4-7)

**காணி விற்பனை**

**மல்லாகத்தில் அளுக்கைச் சந்திக்கு அண்மையில் (5ஆம் பாலத்திற்கு அருகில்) கூட்டுறவாளர் வீதியில் நிலப்பரப்பு 5 உள்ள ஆதனம் விற்பனைக்கு உண்டு.**

தொடர்பு:
செ.கணேசமூர்த்தி 'ஆசிரியர்'
உலவிக்குளம் பிள்ளையார் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(C/38024)(42)

**ENGLISH**
CLASSES
**CERTIFICATE**
*Commences next week*
Sorry! **IELTS DIPLOMA Full**
BOOK NOW FOR NEW BATCHES
**BRITISH BUSINESS SCHOOL**
140, TEMPLE ROAD, JAFFNA.
TELEPHONE : 021-2225796

# வலிகாமத்தில் மூன்று பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

வலி.தெற்கு,ஒக்.7

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளில் வெற்றிடமாகியுள்ள அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை என்பவற்றுக்கே அதிபர் பதவியை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு ஒன்று, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I, வகுப்பு 2-II ஆகியவற்றைச் சேர்ந்தவர்களே இதற்கு விண்ணப்பிக்கலாம்.

நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்பாக வலிகாமம் கல்வி வலயத்தில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போல் தயாரிக்கப்பட்ட படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து அலுவலகத்தில் சேர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-152)






# பாடசாலை முகாமைக்குள் அறிமுகமாகும் துரித கல்வி நிகழ்ச்சித் திட்டம்

மாணவர்களதும், சமுதாயத்தினதும் வளாசசியிலும் முன்னேற்றத்திலும் விரிவான கவனம் செலுத்திவரும் கல்வி அமைச்சு, விழுமிய நெறிமுறைகள் மற்றும் சமூக உணர்வுகள் பற்றிய "துரித கல்வி நிகழ்ச்சித் திட்டம்" ஒன்றை பாடசாலை முறைமைக்குள் அறிமுகப்படுத்தி செயற்படுத்த முடிவுசெய்துள்ளது.

மக்களின் கலாசார, சமூக, பொருளாதார முன்னேற்றங்களுக்கு அடிகோலிய சமூக விழுமிய நெறிமுறைகள் விரைந்து வீழ்ச்சியடைந்து வரும் இன்றைய காலகட்டத்தில், கடந்த காலங்களில் மக்கள் மத்தியில் நிலவிவந்த பரஸ்பர நட்புறவுகள், சமூக ஒருமைப்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சகவாழ்வு, மானிடநேயம், கௌரவம் பற்றிய மனப்பாங்கு என்பனவும் அழிவுக்கு உட்பட்டுள்ளன.

இவவகையான சிறந்த மனப்பாங்குகளுக்கு பதிலாக அதிகாரத்துவம், ஆக்கிரமிப்பு, வன்செயல்கள் போன்ற உணர்வுகளைக் கொண்டுள்ள புதிய சமூகம் ஒன்று உருவாகிக் கொண்டுவருகின்றது.

சமூக மயமாக்கப்பட்டுவிட்டதான இத்தகைய செயற்பாடுகளும் மனஉணர்வுகளும் பாடசாலை மாணவர் சமூகத்தின் மத்தியிலும் நுழைந்து வேரூன்றப் பார்க்கின்றது. இந்த நிலைப்பாடானது எமது எதிர்காலப் பரம்பரையினர் நற்பண்புடையவர்களாக உருவாக்குவதற்கு பெரும் தடையாகவும் சவாலாகவும் அமையப்போகின்றது.

எதிர்கால பரம்பரையினரை மேற்படி மகிழ்ச்சியை தரமுடியாத நிலையில் உள்ள செயற்பாடுகளில் இருந்து விரைந்து மீட்க வேண்டிய அவசியமும் கட்டாயத் தேவையும் சமூகப் பொறுப்புடையவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் ஏற்பட்டுள்ளது மறுக்கமுடியாத உண்மை.

பாடசாலைகளில் இருந்து உருவாகும் எதிர்கால நற்பிரசைகள், எமது பாரம்பரிய பண்பாடுகள், கலாசாரங்களுக்கு உட்படுத்தப்பட்டு ஆற்றல்மிக்கவர்களாகவும் நாகரிகம் பொருந்தியவர்களாகவும் மாற்றமடைய வேண்டும்.

மனிதநேயம், தேசப்பற்றுக்கொண்ட பிரசைகளாக உருவாக்கப்படவும், ஏற்ற கல்விச் செயற்பாடுகளை வழங்கவேண்டிய பாரிய பொறுப்புகள் மேற்கூறிய தரப்பினருக்கு உணடு.

இச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இன்று கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுத்து, பாடசாலைகள் மூலம் திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள உள்ளது. இவற்றை நடைமுறைப்படுத்தவென விழுமிய நெறிமுறைகள், சமூக உணர்வுகள் நிறைந்த குழுவினரை கல்வி அமைச்சு நியமித்துள்ளது.

இக்குழுவினர் பல்வேறு நோக்கங்களை முதன்மையாகக்கொண்டு இனங்காணப்பட்ட

**செய்திக் கட்டுரை**

செயற்றிட்டங்களை அமுல்படுத்த உள்ளனர்.

இத்திட்டங்களின் நோக்கங்களாக -

★ மாணவர்களின் சுய செயற்பாடுகளை வளர்த்து பூரண மனிதத்துவத்தின் முன்மாதிரியாக அவர்களை மாற்றமடைய உதவுதல்.

★ தங்களையும் தங்களைச் சுற்றியுள்ள சமூகத்தையும் திருப்திப்பட வைக்கக்கூடிய ஒழுககமுறைகள், பிரயோகமுறைகள் கொண்ட மனப்பாங்குகளை உருவாக்க உதவுதல்.

★ வன்செயல்களில் இருந்து விடுபட்டு, ஒன்றுபட்ட அபிவிருத்திகளில் ஈடுபட்டு சமூக - சகவாழ்வுடன் வாழ்வதற்கேற்ற பண்புகளை வளர்க்க உதவுதல்.

★ தற்காலத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுககு ஈடுகொடுக்கவும் ஆற்றல்களை வளர்த்து பூரண ஆளுமையை ஏற்படுத்தவும் உதவிசெய்தல்

★ தமது கடமைகள், பொறுப்புக்கள், மனித உரிமைகள், மனிதகௌரவம் என்பவற்றை மதித்து தமது சமூகம் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைத் தீர்ப்பதற்கேற்ற வழிமுறைகளை கையாளக்கூடியவாறு மாணவர்களை வளர்த்தெடுத்தல்.

★ தேசபக்தி, கலாசார விழுமியங்களை மதிக்கும் மனப்பாங்குகளை வளர்த்தல்

மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஒரு 'துரித நிகழ்ச்சித் திட்டத்தினை பாடசாலை முகாமைக்குள் அறிமுகப்படுத்த உள்ளனர்.

இத்துரித நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் இடம்பெறும் வழமையான செயற்பாடுகளுடன் ஆன்மீகசுவைக்கான செயற்றிட்டம், அழகியற் கலைப் படைப்பாற்றல் திறன விருத்திச் செயற்றிட்டம், பாடசாலை மாணவர் நட்புறவு அமைப்புக்கள் செயற்றிட்டம், சமூக சேவைகள், பொதுச்சேவைகள் செயற்றிட்டம், புகைத்தல் பொருள்களில் இருந்து மாணவர்களை மீட்கும் செயற்றிட்டம், பெற்றோர் இணைபபு செயற்றிட்டம் என பல செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

இச்செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பாடசாலைகளில் உரியவேளைகளில் வேலைகளை மேற்கொள்ள பழகுதல், மதவழிபாடுகள் மூலம் மன ஒருமைப்பாட்டை வளர்த்து மாணவர்களின் மொழி ஆற்றல்களை வளரச் செய்தல், பரஸ்பர ஒற்றுமையுடன் கற்பதற்கு பழகுதல், கல்விச் சுற்றுலாக்கள், பொருட்காட்சிகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தி நடத்துவதன் மூலம் பல அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல், அழகியற் கலைப் படைப்பாற்றல்களை விருத்திசெய்தல், மன்றங்கள் அமைதது நட்புறவைப் பேணுதல், சமூக உணர்வுகளை ஏற்படுத்தும் வகையிலான பொதுச்சேவைகளில் இணைந்து செயற்படல், வைத்தியசாலைகள், சிறுவர் இல்லங்கள், முதியோர் விடுதிகள் என்பவற்றுக்கு உதவிகள் புரிதல், போதைப் பொருள்கள், புகைத்தல் எதிர்ப்பு வட்டங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் அப்பழக்கத்துக்கு அடிமையானவர்களை மீட்டு எடுத்தல் போன்ற பல நற்கருமங்களைச் செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நல்ல பல திட்டங்களை துரிதமாகச் செயறபடுத்த விளையும் கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் நற்பிரசை

**- விஸ்வபரி -**

களை கொண்ட புதிய சமுதாயத்தை ஏற்படுத்திக் கொள்வது எம் எல்லோருடைய கடமையல்லவா? ◆

# தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் அரசின் வெறும் பம்மாத்து வேலை!

## விமர்சிக்கின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு,ஒக்.7

ஜனாதிபதி அமைத்துள்ள சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச் சபை ஒரு பம்மாத்து, பக்கச்சார்பானதும், ஒருபக்க கருத்துக்களைக் கொண்டவர்கள் மட்டுமே பங்குவகிக்கின்றதுமான இந்த ஆலோசனைச் சபையினால் எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை என்கிறார் முனனாள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான ஹேரம குமார நாணயக்கார.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இப்படிக் கூறினார்.

'இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி அமைத்துள்ள தேசிய ஆலோசனைச் சபையில் ஐ.தே.க. ஏன் கலந்து கொள்ளவில்லை? சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு உங்கள் கட்சிக்கு விருப்பம் இல்லையா?' - என செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

'ஜனாதிபதிக்கு சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்ற நோக்கம் இல்லை. சமாதானப் பேச்சுக்களைத் தாமதப்படுத்தி இழுத்தடிக்கவேண்டும் என்பதே ஜனாதிபதியின் உள்நோக்கம்.

ஸ்ரீல.சு.கட்சியினருக்கும் ஜே.வி.பியினருக்கும் கூட்டு அரசாங்கம் என்ற வகையில் சமாதான முன்னெடுப்புக்களை துரிதப்படுத்துவதற்கான கூட்டுப் பொறுப்பு உண்டு.

'ஆனால் தனது கூட்டணியில் உள்ள ஜே.வி.பியினரையே ஜனாதிபதியினால் வழிக்குக் கொண்டுவரமுடியவில்லை.

'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனைகளின் அடிப்படையில் விட்ட இடத்தில் இருந்து பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே ஐ.தே.கவின் நிலைப்பாடு. இன்று புலிகளின் நிலைப்பாடும் அதுவே .

'ஆனால், இந்நிலைப்பாட்டிற்கு நேர்வே விரோதமான போக்கைக் கொண்டவர்களும், ஒருபக்கச் சார்பானவர்களும் மட்டுமே ஜனாதிபதியின் ஆலோசனைச் சபையில் கலந்து கொள்கின்றனர்.

'அங்கே சுதந்திரமான கருத்துக்களை - இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சாதகமான ஆலோசனைகளை - வழங்கக்கூடிய வாய்ப்புக்களும் இல்லை.

'சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து ஐ.தே.க. மாறவில்லை. விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தால் எங்கள் கட்சியின் முழு ஆதரவும் அரசுக்குண்டு.

சமாதானப் பேச்சை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், ஆலோசனைச்சபை என்று இழுத்தடிப்பதையே நாம் எதிர்க்கின்றோம்." - என ஹேரம குமார நாணயக்கார பதில் அளித்தார். (க)

# இணைந்த சேவை அலுவலர்களின் இடமாற்றம் பற்றிய விமர்சனங்கள்

வடக்கு - கிழக்கு மாகாண இணைந்த சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்றப் பட்டியல் வெளியாகியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சி.தங்கராஜா தனது PA/AT/2005 ஆம் இலக்க 01.10.2004 ஆம் திகதிய தேசிய சுற்றறிக்கையின்படி 01-01-2005 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இடமாற்றக் கட்டளையைப் பிறப்பித்துள்ளார்.

இந்த இடமாற்றக் கட்டளையானது அலுவலர்கள் மத்தியில் பரபரப்பாக விமர்சிக்கப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதுதொடர்பாக அலுவலர் ஒருவர் கருத்துத் தெரிவித்தபோது -

வழமையாக மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்படும் இடமாற்றக்கட்டளை இந்தவருடம் பிரதம செயலாளரினால் விடுக்கப்பட்டுள்ளது. இணைந்த சேவை அலுவலர்களின் இடமாற்ற விடயங்கள் மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

பிரதம செயலாளர் இந்தவிடயத்தில் தலையீட்டிருப்பது அலுவலர்களின் நலனில் உள்ள அக்கறையை விட, இடமாற்றக் கட்டளையை எப்படியாவது நிறைவேற்றவேண்டும் என்ற மாகாணசபை உயர்மட்ட அதிகாரிகளின் அதிகாரப் போக்கினையே வெளிப்படுத்துகின்றது.

பிரதம செயலாளரின் இடமாற்றக் கட்டளையின் 7 ஆவது பந்தியில் "சில உத்தியோகத்தர்களுக்கு 2004 ஆம் ஆண்டில் வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டுக்கமைய இடமாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளன. எனவே, 2004 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்திற்கமைய இன்றுவரை புதிய சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்காதவர்களும் 01.01.2005 ஆம் திகதியில் புதிய நிலையத்தில் கடமையைப் பொறுபபேற்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளது.

ஆனால், பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரினால் தயாரிக்கப்பட்டுள்ள இடமாற்றக் கட்டளையில் அவர்களுக்குப் புதிய நிலையங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், இடமாற்றக் கட்டளை குழப்பமாக உள்ளது - என்று தெரிவித்தார்.

இதுபற்றி இன்னுமொருவர் கருத்துத் தெரிவிக்கையில் இந்த இடமாற்றக்கட்டளை பெரியளவில் ஆரம்பிக்கப்பட்டு விருப்பத்திற்குரிய நிலையங்கள் மூன்று எம்மிடம் கேட்கப்பட்டன. நாமும் எமது தெரிவினைத் தெரிவித்திருந்தோம்.

ஆனால் எம்மில் எவருக்குமே நாம் கேட்ட விருப்பத்துக்குரிய நிலையங்கள் கிடைக்கவில்லை. ஆனால் நாம் விரும்பிய இடங்கள் வேறு ஆள்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில வியப்பு என்னவென்றால் அந்த இடங்கள் அவாகளுக்கும் விருப்பத்திற்கு உரியவை அல்ல.

வேறு சிலர் கருத்துத் தெரிவிக்கையில் 01.10.2004 ஆம் திகதி முதல் என்று சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பத்திரிகையிலே (05.10.2004) நாம் அறிந்துள்ளோம். அலுவலக ரீதியிலான மேன்முறையீட்டு விண்ணப்பிப்பதாயின் தகுந்த காரணம் சான்றாதாராம் என்பவற்றுடன் திணைக்களத்தலைவர் ஊடாக, அமைச்சுச் செயலாளரின் விதப்புரையுடன் அனுப்பப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**- தம்பலகமத்தான் -**

ஆனால், இன்றிலிருந்து ஆறு வேலைநாள்களே கால அவகாசமாக உள்ளது. இவ்வாறு நடைமுறைக்குச் சாத்தியமற்றவகையில் மேன்முறையீட்டுக்கான கால அவகாசத்தைக் குறைத்து வலைப்பின்னலை அதிகரித்தமை மேன்முறையீடு செய்வதற்கு அலுவலர்களுக்கு சந்தர்ப்பம் வழங்காமையையும், இடமாற்றத்தை எப்படியாவது நிறைவேற்றவேண்டும் என்ற உயர்மட்ட அதிகாரிகளது அதிகாரப் போக்கினையுமே உணர்த்துவதாக உள்ளது.

இவ்வாறு - வடக்கு கிழக்கு மாகாண சபையின் உயர் அதிகாரிகள் நிறுவனத்தினதோ, ஊழியர்களினதோ நலனில் அக்கறை அற்று ஏன செயற்படுகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். ★

# தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் கூட்டம்

## மு.கா.துணைத் தலைவர் ஷஹித் கட்சி சார்பில் பங்குபற்றவில்லை

### உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு,ஒக்.7

ஜனாதிபதியினால் நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் எவரும் பங்குபற்றவில்லை என அக்கட்சி நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

கட்சியின் துணைத்தலைவர்களுள் ஒருவரான சட்டத்தரணி என்.எம். ஷஹித், தாம் கட்சியின் சார்பில் பங்குபற்றுகின்றார் எனத் தெரிவித்து அக்கூட்டத்தில் உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பாக கட்சியின்செயலாளர் நாயகமும், எம்.பியுமான எம்.ரி.ஹசன் அலி நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாபதியினால் 04.10.2004 கூட்டப்பட்ட தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் எவரும் நியமிக்கப்படவில்லை.

மேற்படி கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைச் சிபாரிசு செய்யுமாறு சமாதான செயலக இயக்குநர் நாயகம் தயாணந்த தனபால, கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தார். அவரது வேண்டுகோள்படி கட்சி யாரையும் சிபாரிசு செய்யவில்லை.

ஜனாதிபதியினால் கூட்டப்பட்ட மேற்படி கூட்டத்தில் சட்டத்தரணி என்.எம்.ஷஹித்தை அழைத்தவிடயம் கட்சிக்குத் தெரியாமலே நடந்துள்ளது. கட்சியின் சார்பில் அவரைக் கலந்து கொள்ளச் செய்திருந்தால் அவ்வாறான காரியத்துக்குத் துணைபோயிருந்த அனைத்துச் சக்திகளையும் கட்சி கண்டிக்கிறது.

சமாதான முயற்சிகளில் எவ்வாறான நிலையை எடுக்கவேண்டும் என கட்சி ஏற்கனவே ஒரு முடிவை எடுத்துள்ளது. முஸ்லிம் மக்களிடமிருந்து மிகப் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்ற ஒரேயொரு ஸ்தாபனம் என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் சமாதானப் பேச்சுகளில் தனித்தரப்பாக பங்குபற்றவேண்டும் எனற கோரிக்கையை முன்வைத்துள்ளது. முஸ்லிம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற இக்கோரிக்கை சம்பந்தமாகத் தெளிவான ஒரு நிலைப்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்தாதவரை மேறபடி சபையில் கலந்துகொள்வதில்லை என கட்சியின் அதி உயர் அரசியல்பீடம் ஏற்கனவே தீர்மானித்துள்ளது. அந்த வகையில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னரே ஒரு தீர்க்கமான முடிவை எய்த கட்சி தீர்மானித்துள்ளது.

எனவே, மேறகுறிப்பிட்ட தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எந்தவகையிலும் பங்குபற்றவில்லை என்பதை தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# எரிபொருள்நிலையம் தரமுயர்த்தப்படவுள்ளது

தென்மராட்சி,ஒக்.7

யுத்தத்தினால் சேதமடைந்த சாவகச்சேரி எரிபொருள் நிலையம் முதற்தர எரிபொருள் நிலையமாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி, எரிபொருள்கள், மின்சக்தி அமைச்சினால் வழங்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் எரிபொருள் மின்சக்தி அமைச்சருடன் கலந்துரையாடியதையடுத்து அவர் நிதி ஒதுக்கித்தருவதாக உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தினால் சேதமடைந்த கட்டடத்தில் எரிபொருள் நிலையம் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் தற்போது நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (10-117)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

### யா/செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை 2004 இல் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களையும் அண்மித்த புள்ளி எடுத்த மாணவனையும் இவர்களை வழிநடத்திய அதிபர், கல்விகற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1. கணேசமூர்த்தி ஜெனிதா 128 புள்ளிகள்
2. அம்பிகைபாகன் அனந்தா 125 புள்ளிகள்
3. பாலசுப்பிரமணியம் மிதிலாஜனன் 118 புள்ளிகள்

(26-14-44)

(சி-38029) **பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/குடமியன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை



செல்வி **சிந்துஸா முத்துலிங்கம்**
(141 புள்ளிகள்)



செல்வி **பிரதீபா பரமநாதன்**
(129 புள்ளிகள்)

2004 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தமது பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமைசேர்த்த மேற்படி மாணவிகளையும் அவர்களைக் கற்பித்த ஆசிரியை *திருமதி சி.திருக்குமரன்* அவர்களையும் ஆரம்ப வகுப்புகளில் கல்வியூட்டிய ஆசிரியர்களையும் மற்றும் ஊக்கமளித்த அதிபரையும் உளமார வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, சகோதரிகள். (37245)(34-14-44-26) நாவற்காடு, வரணி. அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்.



## பாராட்டி வாழ்த்துகிறோம்

செல்வறாஜன் - இமல்டா
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய
மாணவியுமாகிய
செல்வி
**செல்வறாஜன் ஆன் டனியா**
2004ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 136 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். குழந்தை இயேசுவின் அருளும் ஆசியும் இன்றும் என்றும் கிடைத்திட வேண்டுகின்றோம்.
அவரது கல்விக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
*கச்சாய் றோட், கொடிகாமம்.* அம்மம்மா, மாமாமார், சித்திமார், சித்தப்பாமார், சகோதரர்கள்.

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையும்
வட - கிழக்கு மனிதாபிமான புனர்வாழ்வு சேவைகள்
தனியார் நிறுவனமும் (வரையறுக்கப்பட்ட) இணைந்து நடத்தும்
காது, மூக்கு, தொண்டை (ENT) நோய்களுக்கான
**இலவச மருத்துவப் பரிசோதனையும், இலவசக் கண் பரிசோதனையும்**

உலக சுகாதார நிறுவனத்தில் கடமையாற்றும் காது, மூக்கு, தொண்டைக்கான வைத்திய நிபுணரால் கீழ்க்காணும் இடங்களில் இலவச மருத்துவப் பரிசோதனையும், S.M.பெர்னாண்டோ நிறுவனத்தினரால் இலவச கண் பரிசோதனையும் இடம்பெறவுள்ளன.

01. 08.10.2004 (வெள்ளி) - காலை 9.00 மணி - புத்தூர் மெதடிஸ் மிசன் வைத்தியசாலை
02. 09.10.2004 (சனி) - காலை 9.00 மணி - யா/வட்டு.மத்திய கல்லூரி - வட்டுக்கோட்டை

*குறிப்பு:* வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள் கிராமசேவையாளர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி/செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுத் தலைவர்/செயலாளர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சமுகந்தருமிடத்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்படும். ஏனையோருக்கு பரிசோதனை செய்யப்பட்டு மருந்துச்சிட்டை வழங்கப்படும்.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ்ப்பாண மாவட்டக் கிளை,**
**இல.73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: **021-222 2561**
(சி-38032)(34-14-44-26)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை மாணவன்
செல்வன் **சிவச்செல்வம் சோபிதன்**
(மாணவன், புனித அந்தோனியார் கல்லூரி)



ஊர்காவற்றுறை.

அவர்கள் கடந்த 02.10.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன், அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை மன்றாடுகின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
**புனித அந்தோனியார் கல்லூரிக் குடும்பம்.**
(37253)(34-14-44-26)

# சச்சு மாஸ்டர் கொலைச் சந்தேகநபர் தொடர்ந்தும் பதுளைச் சிறைச்சாலையில்

**நேற்றுமுன்தினமும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை**

மட்டக்களப்பு,ஒக்.7

மட்டக்களப்புச் சிறையில் வைத்து சச்சு மாஸ்டரைச் சுட்டுக்கொன்றார் எனக் கூறப்படும் சந்தேகநபரான மகேந்திரன் புவிதரன் நான்காவது தடவையாக நேற்றுமுன்தினமும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவில்லை.

பதுளைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபரைப் பாதுகாப்புக் காரணங்களால் நீதிமன்றில் ஆஜர்படுத்தமுடியவில்லை என்று சிறை அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

இந்தக் கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மற்றொரு சந்தேகநபர் மட்டும் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

மட்டக்களப்புச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சச்சு மாஸ்டர் எனப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரனும், தீபன் என்பவரும் கடந்த ஜுலை மாதம் 15 ஆம் திகதி சிறையில் இருந்த மற்றொரு தண்டனைக் கைதியால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பாக மகேந்திரன் புவிதரன் என்பவரும் அவருக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் சிறைக்காவலரான தம்பிராசா அருளம்பலம் என்பவரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் புவிதரனுக்குப் பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்து மட்டக்களப்புச் சிறையிலிருந்த அவரைப் பதுளைச் சிறைக்கு மாற்றினர். அதன்பின்னர் கடந்த நான்கு தவணைகளாக பாதுகாப்புக் காரணத்தைக் காட்டி அதிகாரிகள் அவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவில்லை.

இருப்பினும், சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.அஜ்மீர் உத்தரவிட்டார்.

இதற்கிடையில் - கடந்தவருடம் ஜுலை மாதம் 14 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் எட்டு உறுப்பினர்களுக்கான விளக்கமறியல் காலமும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் அவர்கள் அனைவரும் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். (க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்.மாவட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழ் இலக்கியவிழா தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு படை அத்தியட்சகர் மா.ஸ்ரீகாந் கேட்டுள்ளார். (10)

## நோர்வேத் தூதுவர் தென்மாகாணத்துக்கு இந்த வாரம் விஜயம்

கொழும்பு,ஒக்.7

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் இந்த வாரத்தில் தென்மாகாண மாவட்டங்களான மாத்தறை மற்றும் காலிக்கு மூன்றுநாள் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

தென்மாகாணத்தில் நோர்வே உதவியுடன் மேற்கொள்ளப்படும் இரு அபிவிருத்தித் திட்டங்களை நேரில் பார்வையிடுவதே அவரது இந்த விஜயத்தின் நோக்கம் என்று நோர்வேத் தூதரகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த மாவட்டங்களில் உள்ள உள்ளூர் அரசியல்வாதிகளைச் சந்தித்துப் பேசுவதுடன், மாத்தறை மாவட்ட அரச அதிபருடனும் காலி நகர மேயருடனும் சந்திப்புகளை அவர் நடத்தவுள்ளார். உள்ளூர் வர்த்தகர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

தென்மாகாணத்தின் கிராமிய வீதிகளைத் திருத்துவதற்கான 11 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான திட்டத்தையும், ருகுணு பல்கலைக்கழகத்தில் 16 கோடி ரூபா செலவிலான தகவல் தொழில் நுட்பத் திட்டம் ஒன்றையும் நோர்வே செயற்படுத்தி வருகின்றது. (க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.வீதி, யாழ்ப்பாணத்தில்
(சிறாம்பியடி) வசிக்கும்
அருளானந்தம் - சுந்தரபவானி
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் யா/
புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலய
மாணவனுமான
செல்வன் **ஆரா அமுதன்**
2004 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காகப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பெரியப்பா குடும்பத்தினர்** (கொழும்பு),
**மாமா குடும்பத்தினர்** (ஜேர்மனி),
**சித்தப்பா குடும்பத்தினர்** (கனடா),
**பெரியத்தை குடும்பத்தினர்,**
**சின்னப்பம்மா, அண்ணர்மார்,**
**அக்காமார், தம்பி.** (37259)

ஐம்பட்டா வீதி,
கொட்டாஞ்சேனை.
(26-14-44)

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts.

### FACULTY OF AGRICULTURE

Professor in Agronomy/Agricultural Economics/Agricultural Biology

| POST | SALARY SCALE |
| --- | --- |
| Professor | Rs.28050-8x605-32890p.m. |

In addition to the above salary an academic allowance of 30% of salary and other allowance approved by the University Grants Commission will also be paid.

### FACULTY OF GRADUATES STUDIES

i) Visiting Lecturer in Education - Jaffna and Vavuniya centres
Qualifications
a) A First or Second Class degree or Postgraduate or Professional qualifications of a recognized University in the relevant field and
b) Not less than five (05) years experience in the relevant field
Rate of payment: Rs.750/- per hour
The Preson should be able to take lectures in English and Tamil Medium
ii) Visiting Instructor in Computer Science
Qualifications
a) B.Sc. SPecial degree in Computer Science from a recognized University 0r
b) B.Sc. General degree with Computer Science as a Subject from arecognized University
And
c) One year experience in the field of computing
Rate of payment: Rs.250/- per hour

The closing date for entertaining applications
i) Professors - 31 12.2004
ii) Others - 05.11.2004

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by sending a money order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a money order/postal order drawn in favour of the **'Bursar, University of Jaffna'** together with a self addressed stamped envelope 23x10 cm in size.

Those who wish to apply for more than one post. should apply in separate forms for each post.

Applications from the University System/Goverment Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

REGISTAR,
**University of Jaffna,**
**Sri Lanka.**
2004.10.04. (C/38018) (42-14-44-26)

## வடகிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

### வேலைவாய்ப்பு

**1. கனரக வாகன இயக்குநர்கள்** (Heavy Machinery Operators)

| | | |
| --- | --- | --- |
| 1. Track type Tractor D4,D5 | (டோசர்) | (கற்றப்பில்லர் வகை) |
| 2. Backhoe Loader | (பைக்கோ லோடர்) | (கற்றப்பில்லர் வகை) |
| 3. Motor Grader (120H) | (மோட்டோ கிறேடர்) | (கற்றப்பில்லர் வகை) |
| 4. Hydraulic Excavator | (எக்ஸ்கவேற்றர்) | (கற்றப்பில்லர் வகை) |
| 5. Vibrator Roller | (வைபிறேற்றர் றோளர்) | (காம் வகை) |

**2. கனரக வாகன இயக்குநர் உதவியாளர்கள்**

மேற்படி பதவிகளுக்கு ஆற்றலும் அனுபவமும் உள்ளவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு 2004.10.12/13ஆம் திகதிகளில் காலை 10.00 மணிக்குச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

வடகிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்
**NORTH EAST CONSTRUCTION AND TECHNICAL ORGANIZATION**
**(NECTEC)**
கண்டி வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி
(கிளி/மத்தியகல்லூரிக்கு அருகில்). T.P.No: 021 2285917 (C/38028) (42-14-44-26)

# வரட்சியால் பாதிப்புற்றோருக்கு உதவ சிறிய நிவாரணத் தொகையே கிடைத்தது

## முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவிக்கிறார்

ஒட்டுசுட்டான்,ஒக்.7

வரட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கக் கோரியபோது ஒரு சிறிய தொகையே கிடைத்துள்ளது.

இவ்வாறு அண்மையில் முத்தையன்கட்டு வலதுகரைப் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

எமது மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு, வரட்சி நிவாரணம் வழங்க கோரப்பட்டபோது மிகவும் சிறிய தொகையே கிடைத்தது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட குளங்கள் இராணுவ நடவடிக்கையால உடைப்பெடுத்த நிலையிலும், நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையிலும் உள்ளன. இவை மீண்டும் புனரமைக்கப்பட வேண்டும் எனத் தீமானம் கொண்டுவரப்பட்டபோதும் 50 குளங்களுக்கே புனரமைபபுச்செய்ய சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

உள் உணவிற்கு அரிசி தரமுடியாதுள்ளதாகவும், அதற்கான மானியம் எதுவும் இல்லை எனவும், பணம் இல்லையென்றும் திறைசேரி தெரிவிக்கிறது. மின்சாரத்திட்டங்களை முன்னெடுக்கவும் முடியாதுள்ளது. ஜப்பான் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு வேலைகள் மந்தகதியிலே நடைபெறுகின்றன. 6 வீதிகள் 'காவ்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்றன.

எமது மாவட்டத்தில் வேலைகளை மேற்கொள்வோர் பற்றாக்குறையால், பல அபிவிருத்தித்திட்டங்களின் பணிகளை மேற்கொள்ளமுடியாமல் உள்ளது - என்றார். (8-341)

## இருவேறு விபத்துக்களில் இருவர் காயம்!

ஒட்டுசுட்டான்,ஒக்.7

ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் படுகாயம் அடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கற்சிலைமடுவைச் சேர்ந்த வேதவனம் -விமலேநதிரன் (வயது 18) என்பவர் மோட்டார் சைக்கிள் மோதிக் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வித்தியாபுரத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு சுரேஸ் என்பவர் வாகனமொன்றுடன் மோதி படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (8-341)




கிளிநொச்சியில் ஏ-9 வீதி உட்பட பல முக்கிய வீதிகளில் விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன் தமிழீழ காவற்றுறையினர் வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். ஏ-9 வீதியில் வரும் வாகனம் ஒன்றின் வேகத்தை நவீன வேகக் கணிப்பீட்டுக் கருவி ஒன்றின் மூலம் கணிப்பிடுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:பரந்தன் செய்தியாளர்)*

## கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தில் புதிய மரவேலைப் பயிற்சிநெறி ஆரம்பம்

வட்டக்கச்சி,ஒக்.7

உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவன ஆதரவுடன், கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கண்டாவளைப் பிராந்திய நிலையத்தில் புதிய மரவேலைப் பயிற்சிநெறி கடந்த 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு தொழில்நுட்ப கல்வி நிறுவன அதிபர் தி.பிரபாகரன் தலைமையில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியினை பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திலக் ஏற்றிவைக்க, நிறுவனக் கொடியினை நிறுவன ஆளுநர்சபை உறுப்பினரான இ.கணேசபிள்ளை ஏற்றிவைத்தார். இவர்களுடன் தமிழீழ கல்விக்கழக கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் ஜீவராஜ், உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவன திட்ட இணைப்பாளர் எஸ்.ஜெயராஜசிங்கம், அதன் கிளிநொச்சி பிரதேச இணைப்பாளர் சீலன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். (8-405)

## நவராத்திரி தினத்தை முன்னிட்டு பண்ணிசைப் போட்டி

வட்டக்கச்சி,ஒக்.7

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழகமானது நவராத்திரி தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது.

இப்போட்டியானது மூன்று பிரிவுகளாக நடைபெறும். தரம் 6,7,8 என்பன கீழ்ப்பிரிவையும், தரம் 8,9,10,11 ஆகியன மத்திய பிரிவாகவும், தரம் 12,13 மேல் பிரிவாகவும் போட்டிகள் நடைபெறும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்து ஒவ்வாரு பிரிவுக்கும் மூன்றுக்கு மேற்படாத மாணவர்கள் பங்குபற்ற முடியும் எனவும் இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறும் திருநெறிக்கழகத்தினர் கேட்டுள்ளனர். (4-405)

## வட்டக்கச்சி ம.வியில் சிறுவர் தினம் அனுஷ்டிப்பு

வட்டக்கச்சி,ஒக்.7

கிளிநொச்சி வட்டக்கச்சி ம.வியில் கடந்த முதலாம் திகதி அனைத்துலக சிறுவர்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் சி. சந்திரராஜா தலைமையில் பாடசாலையின் ஆரம்பப்பிரிவில் இந்நிகழ்வு நடைபெற்றது. ஆசிரியர்களது செலவில் மாணவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (4-405)

## உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு

வட்டக்கச்சி,ஒக்.7

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பெற தெரிவு செய்யப்பட்ட கிளிநொச்சி வலய மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவு கடந்த 4ஆம் திகதி கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது. (8-405)



நியாப்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட மணியங்குளத்தைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் அரச அதிபர் தி.இராசநாயகம் மங்கல விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:ஸ்கந்தபுரம் செய்தியாளர்)*

## கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவனம் வன்னி மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

### பேராசிரியர் நவரட்ணராஜா உரை

வட்டக்கச்சி,ஒக்.7

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்ப கல்வி நிறுவனமானது வன்னிப்பிரதேச மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் பொருண்மிய மதியுரையகத் தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடப் பேராசிரியருமான அ.நவரட்ணராஜா.

கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற 'ஏஏரி' (AAT) கற்கைநெறி ஆரம்பநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னிப்பிரதேசமானது யுத்தத்தால் அழிவடைந்து புத்துயிர் பெற்றுவரும் இவ்வேளையில், இந்த நிறுவனம் அளப்பரிய சேவைகளை ஆற்றிவருகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு அநேகமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால், வன்னிப் பகுதியில் அவ்வாறு இல்லை. இந்நிலையில் இந்நிறுவனத்தின் பணி மகத்தானது. அத்துடன் மாறிவரும் உலகுக்கு ஏற்றவிதத்தில் இக்கற்கை நெறியினை ஆங்கில மொழிமூலம் நடத்துவது மிகவும் சிறப்பானது - என்றார். (8-405)

## இடர்பாடுகளுக்கு மத்தியில் இயங்கும் பாடசாலை

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மன்னாகண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பல்வேறு இடர்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

மன்னாகண்டல் அ.த.க.பாடசாலைக்கான சுற்றுவேலிகள் இல்லாததோடு கட்டட வசதிகளும் இல்லை. மழை நேரங்களில் கால்நடைகள் பாடசாலையில் தங்குவதால் கால்நடைக் கழிவுகளை மாணவர்கள் அகற்றிய பின்பே வகுப்புகளுக்குச் செல்லவேண்டியுள்ளது.

பாடசாலையில் உள்ள மலசலகூடமும் மிக நீண்ட நாள்களாக அரைகுறை வேலையுடன் இருந்துவருவதால் ஆசிரியர்களும் மாணவர்களும் மிகுந்த இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். (8-341)




### முல்லைத்தீவு மாவட்ட

## பெண்கள் சங்கம நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது

ஒட்டுசுட்டான்,ஒக்.7

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் 2ஆம் லெப் மாலதியின் நினைவு நாளை முன்னிட்டு முல்லை மாவட்ட பெண்கள் சங்கமம் நிகழ்வு, முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி வேளினி தலைமையில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் கடந்த 2 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

நிகழ்வின் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஏற்றிவைக்க, தமிழழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார்.

2 ஆம் லெப். மாலதியின் திருஉருவப் படத்திற்கான ஈகச்சுடரினைத் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி ஏற்றிவைக்க, மலர் மாலையினை அளம்பில் பங்குத் தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் அணிவித்தார். மலர் வணக்கத்தினை கௌரவ வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆரம்பித்தார்.

தலைமையுரையினைத் தொடர்ந்து கருத்துரைகளை 'பெண்களும் சமூகமும்' என்ற தலைப்பின் கீழ் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, 'சமூக அபிவிருத்தியில் பெண்கள்' என்ற தலைப்பில் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயகுலராசா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பதமினி சிதம்பரநாதன் 'பெண் விடுதலை தொடர்பாக' பெண்படைப்பாளி திருமதி ஆதிலட்சுமி - சிவகுமார், அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகள், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட சகல பெண்கள் அமைப்புக்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், அரசியல் துறையினர், முல்லை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினர், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்லூரி மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (8-341)

## அதிபர் கூட்டம்

வட்டக்கச்சி,ஒக்.7

கிளிநொச்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கிய பல விடயங்கள் கலந்துரையாடப்படவிருப்பதால் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார். (4-405)

# 70 வீத சம்பள உயர்வு தருவோம் என்றனர் ஆனால் விலைவாசிதான் 70 வீதம் உயர்ந்தது

## அதை எதிர்த்து 8 நகரங்களில் ஆர்ப்பாட்டங்களுக்கு ஐ.தே.க. முஸ்தீபு

கொழும்பு,ஒக்.7

அரச ஊழியர்களுக்கு எழுபது வீத சம்பள உயர்வை வழங்குவோம் என உறுதியளித்து ஆட்சிக்குவந்த இந்த அரசு, இப்பொழுது அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்களின் விலையை எழுபது வீதத்தால் அதிகரித்துச் சாதனை படைத்துவிட்டது என்று அரசின்மீது ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்துகின்றது.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹேமகுமார நாணயக்காரவும், லஷ்மன் செனவிரத்னவும் இவ்வாறு குறிப்பிட்டனர்.

இந்தக் கூட்டு அரசிடம் உறுதியான அரசியல் நிலைப்பாடும் இல்லை; உறுதியான பொருளாதாரக் கொள்கையும் இல்லை. அதனால், உலக நாடுகளின் உதவிகளையும் இழந்து திக்குமுக்காடுகின்றது நாடு.

ஆளும் கட்சிக்குள்ளும் குத்துவெட்டு; அமைச்சரவைக்குள்ளும் முட்டிமோதல்கள். ஜே.வி.பி. அமைச்சர் அனுர திஸாநாயக்க ஒரு மணி அரிசியையாவது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய இடமளிக்கமாட்டேன் என்றார். அதே நேரத்தில் வர்த்தக, வாணிப அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இருந்து அரிசியைக் கொண்டுவருவேன் எனச் சூளுரைத்து அந்த நாடுகளுக்குக் காவடி எடுத்துச் செல்கின்றார்.

இங்கே சகலவிதமான உணவுப்பொருள்களின் விலைகளும் - குறிப்பாக குழந்தைகளுக்கான பால் உணவுகள, மருந்து வகைகள உட்பட அனைத்தும் - ரொக கட் வேகத்தில் உயர்ந்துவிட்டன.

இதனால், மீண்டும் இங்கு 'கியூ' முறை உருவாகப் போவது உறுதி. பட்டினிச்சாவுகளும் சர்வசாதாரணமாகப் போகின்றன. ஆனால், அரசோ இவைபற்றி எதுவும் அலட்டிக்கொள்வதாக இல்லை.

அரசுக்கு ஆதரவானவர்களே இன்று அரசிற்கு எதிராகக் கிளம்பிவிட்டனர்.

ஒன்றுபட்ட மக்களின் குரலுக்கு மிஞ்சிய சக்தி எதுவுமே இல்லை.

உடனடியாகப் பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விலைவாசி உயர்வைக் கண்டித்தும் அரச ஊழியருக்குச் சம்பள உயர்வைக் கோரியும் நாம் கொழும்பில் நடத்திய மக்கள் எழுச்சிப் பேரணி பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, கொழும்புக்கு வெளியே எட்டு முக்கிய நகரங்களில் அரச எதிர்ப்பு - மக்கள் எழுச்சிப் பேரணிகளை நடத்தவுள்ளோம். முதற்கட்டமாக பதுளை, பண்டாரவளை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருநாகல் ஆகிய நகரங்களில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இம்மக்கள் எழுச்சிப் பேரணிகளில் சகல எதிர்க்கட்சிகளும் கலந்துகொள்ளவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அழைப்புவிடுத்துள்ளது.

- இப்படி ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்தியாளர் மாநாட்டில் கூறினார்கள். (க-3)



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மங்கள வாத்தியங்கள் சகிதம் மாணவர்களால் அழைத்து வரப்படுவதைப் படங்களில் காணலாம். (படம்: தீபன்)

# தமிழ் இலக்கிய விழாவில் அறிஞர்களின் ஆய்வரங்குகள்

யாழ்ப்பாணம்,ஒக்.7

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் 11 ஆம் திகதிகளில் நடத்தவுள்ள தமிழ் இலக்கிய விழாவில் அறிஞர்களுடைய ஆய்வரங்குகள் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை இந்த ஆய்வரங்குகள் நடைபெறும்.

முதலாவது நாள் ஆய்வரங்கு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர், பேராசிரியர் சி.மௌன குரு தலைமையில் நடைபெறும்.

இதில் "மேல் நாட்டார் வருகைக்கு முன்னர் நிலவிய கல்விசார் அறிவிலக்கியப் பாரம்பரியம்" என்னும் தலைப்பில் கலாநிதி க.ரகுவரனும் "போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் கல்விசார், அறிவியல் சார் நூல்கள்" என்னும் தலைப்பில் ஈஸ்வரநாதபிள்ளை குமரனும், "பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மிசனறிகளின் செயற்பாடு" என்னும் தலைப்பில் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனும் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

இரண்டாம் நாள் ஆய்வரங்கு யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இதில் "பாடநூல்களில் பெண்கள்" என்னும் தலைப்பில் பேராசிரியை சித்திரலேகா மௌனகுருவும், "நாவலர் கல்விமுறை" என்னும் தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும், "1900-1950 காலப்பகுதியில் பாடப்புத்தகங்கள், துணைப்பாடப் புத்தகங்கள்" என்னும் தலைப்பில் கலாநிதி செ.யோகராசாவும், "தமிழ்மொழிக் கல்வி - மொழிபெயர்ப்புகள் கலைச்சொல்லாக்கம்" என்னும் தலைப்பில் பேராசிரியர் சபா.ஜெயராசாவும் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளனர்.

மூன்றாம் நாள் ஆய்வரங்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நடைபெறும்.

இதில் "தமிழ்மொழிக்கல்வியியல் எழுத்துக்கள்" என்னும் தலைப்பில் பேராசிரியர் சோ.சந்திரசேகரனும், "கல்வியியல் நோக்கு - நவீன போக்குகள்" என்னும் தலைப்பில் செம்பியன்செல்வனும், "கல்விசார் இஸ்லாமிய - அரபுபாட நூல்கள் சில அவதானங்கள்" என்னும் தலைப்பில் ஜனாப் ரமீஸ் அப்துல்லாவும் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (8-13)

# கரையோர வளங்களைப் பாதுகாத்தல் தொடர்பான செயலமர்வு பல்கலையில்

யாழ்ப்பாணம்,ஒக்.7

கரையோர வளங்களைப் பாதுகாத்தலும் முகாமைத்துவமும் என்ற தொனிப்பொருளிலான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 23ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை மீன்பிடியியல் நீர்வளச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட, கடல்வள அபிவிருத்தி நிலையம் இதனை நடத்துகின்றது.

காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இச்செயலமர்வு நடைபெறும்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்காக இச்செயலமர்வு நடத்தப்படுகின்றது.

குடாநாட்டின் கரையோரவளங்களின் பாதுகாத்தலுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதே இச்செயலமர்வின் நோக்கமாகும் என்று யாழ். பல்கலைக்கழகக் கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் கே.சிதம்பரவடிவேல் தெரிவித்தார். (10-7)

# நூலக வாரம்

வலி.தென்மேற்கு,ஒக்.7

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நூலக வாரம் இம்மாதம் 15ஆம் திகதி முதல் ஒரு வார காலம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நூலகத்திற்குப் பொதுமக்களிடமிருந்தும், நலன் விரும்பிகளிடமிருந்தும் மாணவர்களால் நூல்கள் சேகரிக்கப்படவுள்ளன என்று கல்லூரி அதிபர் திருமதி கிருபாசக்தி சிவராசா தெரிவித்தார். (ஐ-135)

# 'நவோதயா' திட்டத்தில் இணைப்பு

வலி.தென்மேற்கு,ஒக்.7

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, கல்வியமைச்சின் 'நவோதயா' திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு ஒருவார காலம் சிரமதானப் பணிகள் உட்படப் பல்வேறு நிகழ்வுகள் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டன. (ஐ-135)

# மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ். குடாநாட்டில் இந்த மாதத்தில் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய கனத்தமழை பெய்யக்கூடிய காலநிலை தென்படுவதாகத் திருநெல்வேலியில் உள்ள வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று வரையான காலப்பகுதியில் 680.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் -

நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் குடாநாட்டில் தாழமுக்கம் காணப்படும் என்றும் - வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (10-7-ரி-202)

# வாசகர் திருமுகம்

## மோட்டார் சைக்கிள்களுக்கு தரிப்பிடக் கட்டணம் 10 ரூபாவா?

வல்லிபுர ஆழ்வார் கோயிலின் மேற்குப்பக்கப் பிரதான வீதியில் தெற்குப் பக்கமாக விளையாட்டுக்கழகம் ஒன்றினால் இக்கோயிலின் பெருந்திருவிழாவின்போது துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புச் சேவை நடத்தப்பட்டது. அங்கு மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 10 ரூபா அறவீடு செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. அடியார்களுக்குப் பல வழிகளிலும் உதவி ஒத்தாசையாக இருக்கவேண்டிய இக்கழகத்தினர் முட்களுக்கு மத்தியிலும், கொளுத்தும் வெய்யிலின் தாக்கத்திற்கு மத்தியிலும் மோட்டார்சைக்கிள்களைத் தரிக்கவிட்டு இவ்வளவு பணம் அறவிடுவது வேதனைக்குரியது. யாழ். மாநகர சபையே மாநகரசபைக்குட்பட்ட பல்வேறு இடங்களிலும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்பிற்காக ரூபா 4 வரையே அறவீடு செய்துவருகின்றது.

மேற்படி கழகம் 10 ரூபா வீதம் அறவீடு செய்வதற்குச் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகமும், பிரதேச சபையும், ஆலய பரிபாலன சபையும் உடந்தையா என்பது புரியாத புதிராகவே உள்ளது. பக்த அடியார்களிடம் இருந்து மோ.சைக்கிள் பாதுகாப்புக் கட்டணமாக இவ்வளவு தொகை கறந்துதான் விளையாட்டுக்கழகத்தை வளர்க்க வேண்டுமா?

இனிவரும் காலங்களிலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக ஆக்கபூர்வ நடவடிக்கை எடுத்துப் பக்த அடியார்களின் துயர்துடைக்க ஆவனசெய்வர்களாக.

- வல்லிபுர ஆழ்வார் பக்தன்.

## நிரந்தர நியமனம் கிடைக்குமா?

அரச அதிகாரிகளே! 'அரசியல்வாதிகளே! யாழ். குடாவிலுள்ள அரச திணைக்களங்களில் பல வருடங்களாகப் பதில் ஊழியர்களாகப்

பதில் சிற்றூழியர்கள் -

பதில் காவலாளிகள் -

பதில் சுகாதாரத் தொழிலாளிகள் - ஆகப் பணிபுரியும் எங்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்க உதவிபுரிவீர்களா? நாம் பணிபுரியும் திணைககளங்களில் வெற்றிடம் இல்லையாயின், வேறு அரச திணைக்களங்களிலேனும் எமக்கு முன்னுரிமை கொடுத்து நிரந்தர நியமனம் கிடைக்க உதவிபுரிவீர்களா? பல வருடங்களாகப் பதில் கடமைபுரியும் எங்கள் மீதும் உங்கள் பார்வையைக் கருணைகூர்ந்து திருப்புங்கள்.

கல்வியங்காடு. சி.அருள்.

# அச்சுவேலி திரேசாள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

அச்சுவேலி,ஒக்.7

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்.வரதராஜாவும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வர் வண. பிதா ஜே.பி.இ.செல்வராசா, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் அச்சுவேலி பங்குத்தந்தை வண.பிதா ஜோதிநாதர் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8-11)

# 'பிறைற்' புத்தக நிறுவனத்தின் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.7

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் 'பிறைற்' புத்தக நிறுவனம் பாடசாலைகள் தோறும் புத்தகக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

இன்று வியாழக்கிழமை இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் - நாளை வெள்ளிக்கிழமை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் -

எதிர்வரும் 11ஆம் திகதி நெல்லியடி ம.ம. வித்தியாலயத்திலும் 12ஆம் திகதி மயிலணி சைவ மகா வித்தியாலயத்திலும் இக்கண்காட்சிகள் நடைபெறவுள்ளன.

புத்தகக் கண்காட்சிகளை நடத்த விரும்பும் பாடசாலைகள் 'பிறைட்' புத்தக நிறுவனம், 5-27, முதலாம்மாடி, கொழும்பு மத்திய பல் கூட்டுச் சந்தைத் தொகுதி, கொழும்பு-11 என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-204)

# சாயி சிந்தனை

## ஆன்மீகம் என்றால் என்ன?



ஆன்மீகம் என்றால் பலருக்கு அர்த்தமே தெரிவதில்லை. அதனை வேறுவிதமாக அர்த்தம் செய்துகொள்வது நாகரிகமாகப் போய்விட்டது. எத்தனையோ பெரிய மகான்களின் போட்டோவெல்லாம் எடுத்து பிரேம் போட்டு மாட்டுகிறார்கள். கடற்கரையில் பார்த்தால் அநேகர் சிலைகளை வைத்திருப்பதைக் காணலாம். இவ்வாறு சிலைகளையும் படங்களையும் நிறுவுகிறோமே தவிர, அவர்களது அறிவுரைகளை நடைமுறைப்படுத்துகிறோமா? அவற்றையெல்லாம் மண்ணில் போட்டுப் புதைத்துவிட்டு அதன் மேல் சிலைகளை வைக்கிறோம். அதுவும்கூடப் பாவம்தான். காக்கைகளும் குருவிகளும் எச்சமிட்டு அச்சிலைகளை அசுத்தம் செய்கின்றன. இதற்குப் பதிலாக அம்மகான்களை உன் இதயத்தில் பிரதிஷ்டை செய்துகொள். அவர்களது அறிவுரைகளை நினைவிற்கொண்டு நடைமுறைப்படுத்து. அதை விட்டுவிட்டு வெறும் வாய்வார்த்தையாக உரைத்துப் பலனில்லை. ஆகவேதான், துளஸிதாசர் சொன்னார், தில்மேராம் ஹாத்மேகாம் மனதில் இறைவனைப் பிரதிஷ்டை செய்துகொண்டு செயலில் இறங்கு .

ஆதாரம்: சனாதன சாரதி

### உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில்

# சாவ.இந்துக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி.சம்பியன்கள்

தென்மராட்சி,ஒக்.7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 12 வயது, 18 வயது ஆகிய பிரிவுகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் 14 வயதுப் பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் 16 வயதுப் பிரிவில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயமும் சம்பியனாகின.

கடந்த் முதலாம் திகதி கொடிகாமம் அரசினர் வித்தியாலய இராசா மைதானத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

12 வயதுப் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய அணியை 1-0 என்ற கோல் கணக்கிலும்-

14வயதுப் பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி வரணி மகாவித்தியாலய அணியை 1-0 என்ற கோல் கணக்கிலும்-

16 வயதுப் பிரிவில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அணி நாவற்குழி மகாவித்தியாலய அணியை 1-0 என்ற கோல் கணக்கிலும்-

18 வயதுப் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி டிறிபேக் கல்லூரி அணியை 3-1 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றுச் சம்பியனாகின. (10-117)

# உடுவில் கோட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஒக்.7

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கோட்ட மட்ட சம்பியன்களாக ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவினருக்கு இடையேயான இறுதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றுச் சமநிலையில் இருந்தன.

மேலதிகமாக வழங்கப்பட்ட நேரத்திலும் கோல்கள் எதனையும் இரு அணிகளும் பெறாமையினால் சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டு 4-2 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் இணுவில் இந்துக் கல்லூரியும் ஏழாலை மகா வித்தியாலயமும் மோதி ஏழாலை மகாவித்தியாலயம் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் மோதிக்கொண்டன. ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் எத்னையும் பெறாத போதிலும் மேலதிகமாக வழங்கப்பட்ட நேரத்திலும் கோல்கள் எதனையும் இரு அணிகளாலும் பெறமுடியவில்லை.

சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்ட போது ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 4-3 என்ற கோல்கணக்கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலயமும் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயமும் விளையாடி தமிழ் கந்தையா வித்தியாலயம் 2-0 என்ற கோல் கணக்கில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

18 வயதுப் பிரிவிற்கான இறுதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் இணுவில் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

இப்போட்டி தொடக்கத்தில் விறுவிறுப்பாக இருந்த போதிலும் ஆட்ட முடிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி கோட்ட மட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயமும் விளையாடி ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுக்கொண்டது.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் வலிகாமம் கோட்ட மட்டத்தில் இடம் பெறவுள்ள போட்டியில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10-86)

# சம்பியன்களாகத் தெரிவு

வலி.வடக்கு,ஒக்.7

நெடுந்தீவுக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயமும் நெடுந்தீவு மகா வித்தியாலயமும் கோட்ட மட்ட சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.





14 வயதுப் பிரிவில் நெடுந்தீவு மகா விததியாலயமும் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயமும் மோதிக்கொண்டதைத் தொடர்ந்து நெடுந்தீவு மகாவித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்ய்ப்பட்டது.

16 வயதுப் பிரிவில் நெடுந்தீவு மகா வித்தியாலயமும் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயமும் மோதிக்கொண்டதையடுத்து நெடுந்தீவு மகாவித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

18 வயதுப் பிரிவில்நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயமும் நெடுந்தீவு மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டதில் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம் வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன.

இவ்விரு அணிகளும் தீவக வலய மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. (10-86)



மாரீசன்கூடல் புனித கயித்தார் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டியின்போது தெல்லிப்பழை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.சரணவணன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் திருட்திரு பி.எஸ்.பொனிபஸ் மாரீசன் கூடல் பங்குத்தந்தை அருட்திரு ஜே.பி. அன்ரனிதாஸ் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். படம்: மாதகல் செய்தியாளர்.

# ஒருநாள் போட்டித் தரவரிசையில் மேற்கிந்திய அணிக்கு 4ஆம் இடம்

அண்மையில் நடைபெற்று முடிந்த மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் நாடுகளின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட்கவுன்ஸில் வெளியிட்டுள்ளது. அதன்படி மேற்கிந்தியஅணி நான்காம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

ஐந்தாவது இடத்தில் இருந்த இந்தியா 102 புள்ளிகள் பெற்று 7ஆவது இடத்துக்குப்பின் தள்ளப்பட்டுள்ளது. அந்தப் போட்டியில் மோசமாக ஆடியதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா 137 புள்ளிகள் பெற்றுத் தொடர்ந்தும் முதல் இடத்தில் உள்ளது. இலங்கை 121 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்திலும் நியூஸிலாந்து 116 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்திலும் உள்ளன.

மினி உலகக்கிண்ணத்தை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்அணி 107 புள்ளிகளை பெற்று 4 அவது இடத்திலும் இங்கிலாந்து 5 ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 6 ஆவது இடத்திலும் தென்.ஆபிரிக்கா 8 ஆவது இடத்திலும் சிம்பாவே 9 ஆவது இடத்திலும் கென்யா 10 அவது இடத்திலும் பங்களாதேஷ் கடைசி இடத்திலும் உள்ளன. (10)

# இந்திய அணியின் ஆலோசகராக முன்னாள் தலைவர் கவாஸ்கர்

ஆஸ்திரேலியத் தொடருக்கான இந்திய அணியின் ஆலோசகராக, 'கிரிக்கெட் ஜாம்பவான்' சுனில் கவாஸ்கர் நியமிக்கப்பட்டுள்ளார். கவாஸ்கரின் அனுபவம், இந்தத் தொடரில் அணியின் வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்க உதவும்.

ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டிருப்பதால், பயிற்சியாளர் ஜோன் ரைட்டின் அதிகாரம் குறைக்கப்படுவதாக அர்த்தமில்லை. அணி நிர்வாகத்துடன் ஆலோசித்த பிறகே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று இந்திய கிரிகெட் சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.(10)

# நடுவரைத் தாக்கிய மூன்று இளைஞர்கள் கலாசாரம் பேணுவோரால் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.07

உதைபந்தாட்ட நடுவரைத் தாக்கியதாகக் கூறப்படும் மூன்று இளைஞர்கள் கலாசாரத்தைப் பேணுவோரால் பிடிக்கப்பட்டு கடும் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியின் பினனரே நடுவர் தாக்கப்பட்டார்.

நடுவரைத் தாக்கியவர்கள் அளவெட்டியைச சேர்ந்த மூவரே என்பதை கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவர்கள் எதிர்காலத்தில் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவார்களேயானால் கடும தண்டனைக்கு உள்ளாக வேண்டிவரும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை கலவிக்கோட்டத்தில் உள்ள குறிப்பிட்ட இரண்டு பாடசாலைகளில் ஆசிரியர்களைத் தாக்கும் சம்பவங்களும் கூட்டங்களைக் குழப்பும் சமபவங்களும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10-68)

## இன்றைய ஆட்டங்கள்

கரவெட்டி,ஒக்.7

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறவுள்ள உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

★ நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம்

**16 வயதுப் பிரிவு**

❑ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் இமையாணன் அ.த.க பாடசாலை

❑ கரணவாய் மகா வித்தியாலயம் எதிர் அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்

**18 வயதுப் பிரிவு**

❑ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் வல்வை சிதம்பராக் கல்லூரி

★ வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானம்

**16 வயதுப்பிரிவு**

❑ உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி எதிர் பொன்னம்பலம் மகா வித்தியாலயம்

❑ தேவரையாளி இந்துக்கல்லூரி எதிர் வல்வை சிவகுரு வித்தியாலயம்

**18 வயதுப்பிரிவு**

❑ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி எதிர் வல்வை சிவகுரு வித்தியாலயம்

★ பொம்மல் விளையாட்டுக்கழக மைதானம்

**16 வயதுப் பிரிவு**

❑ வல்வெட்டி இந்துதமிழ்க் கலவன் பாடசாலை எதிர் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்

❑ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை வீத்தியாலயம் எதிர் கரவெட்டி விக்னேஸ் வராக் கல்லூரி

**18 வயதுப் பிரிவு**

❑ கரவெட்டி ஞானசிரியர் இந்துக் கல்லூரி எதிர் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலம் (10-7086)

வலி.வடக்கு,ஒக்.7

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்குஇடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டசுற்றுப்போட்டியில்மூன்றாம் இடத்துக்கான போட்டியும் இறுதி ஆட்டமும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

**16 வயது பிரிவு**

மூன்றாம்ஆம் இடம்: கொக்கவில் இந்துக் கல்லூரி எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி

இறுதி ஆட்டம்:

❑ யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம

❑ 18 வயதுப் பிரிவுப் போட்டியில் மூன்றாம் இடத்துக்கான போட்டி மற்றும் இறுதி ஆட்டம் அகியன இன்று நடைபெறவுள்ளன.

# 'ஹட்-ரிக்' எடுக்குமா இந்திய அணி

பெங்களூர்,ஒக்.7

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் 'போர்டர்-கவாஸகர்' தொடர் என்று அழைக்கப்படுகின்றது.

இந்தத் தொடரை இருமுறை இந்திய அணிதான் வென்றிருக்கின்றது.

2000-2001 இல் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஸ்டீவ் வோ தலைமையிலான ஆஸ்திரேலிய அணியை கங்குலி தலைமையிலான அணி 2-1 என்ற முன்னிலையில் வென்று தொடரைக் கைபற்றியது. கடந்த ஆண்டு இந்திய அணி ஆஸ்திரேலியா சென்றபோது தொடர் 1-1 என்ற சமநிலையிலே முடிவுற்றது.

இம்முறை தொடர் சமனிலே முடிந்தாலோ... அல்லது இந்தியா வென்றாலோ தொடரைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக வென்று போஸ்டர் கவாஸ்கர் தொடரைக் கைப்பற்றி 'ஹட்-ரிக்' எடுக்கும் இந்திய அணி. (10)

## கராத்தே தெரிவுப் போட்டிகள்

வலி.வடக்கு,ஒக்.7

ஈழப்பிரியா ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறையினால் தேசிய ரீதியாக நடத்தவுள்ள கராத்தேப் போட்டிக்கான வீர,வீராங்கனைகளைத் தெரிவுசெய்யும் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிமுதல் இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10-86)

## 400 விக்கெட்டுகளை கைபற்றிய அனில்கும்ளே



டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெட்டுக்களை வீழ்த்திய இரணடாவது இந்திய வீரராக அனில்கும்ளே இடம் பெற்றுள்ளார். நேற்று ஆரம்பமான ஆஸ்திரேலிய அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தச் சாதனையை அவர் ஏறபடுத்தினார். முதலிடத்தில் இந்திய அணியின் முன்னாள் தலைவரும் சகல துறை வீரருமான கபில்தேவ் உள்ளார். சொந்த ஊரில் சாதித்த மகிழ்ச்சியுடன் இன்னும் கொஞ்சம் கூடுதலாகச் சுழற்றுவார் கும்ளே. (10)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில்
கல்வி கற்கும்

### செல்வி விதுஷிகா



2004 தரம் 5 புலமைப் பரீட்சையில் (136) புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவருக்கு கல்வி கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் (ஞானக்குழந்தை) கல்விக் கழக ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் மேலும் கல்வியில் சிறப்புற இறைவன் திருவருள்வேண்டி வாழ்த்துகிறோம்.

33/8, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (38058)(43-11-32-45)

அம்மம்மா, அம்மப்பா, மாமாமார்,
அத்தைமார் பெரியப்பா குடும்பம்,
சித்தப்பா (குமிழவேந்தன்).

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

### 2006 A/L

பௌதிக இரசாயனம்

(வாயுக்கள்) புதன், வெள்ளி 3.00 மணி

திரு.மகேஸ்வரன் B.Sc. (Dip. in Edu.) Mpil Edu.

ஆரம்பம் - 08.10.2004 3.00 p.m.

(37294) (38-11-45)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன் திரு.சிவஞானம்
சிவயோகப்பிரியாவின் அன்புத் தாயார்
**திருமதி பூமணி சிவஞானம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைனைப்
பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்.

(37293)(11-45-32)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

### External Degree

G.A.Q. 2005, 2006 பிரிவுக்கானது
(Jaffna University)

- தற்போது நடைபெறவுள்ள G.A.Q .பரீட்சைக்கான விரைவு மீட்டலும் வினா-விடை வகுப்புகளும்,
- சகல பிரிவுகளுக்குமான ENGLISH LITERATURE வகுப்புகள்
- A/L - 2005, A/L-2006 பிரிவுகளுக்கான ENGLISH LITERATURE வகுப்புகள்

ஆரம்பம்;- 09-10-2004

Futher Details
DIRECTOR
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT
464, HOSPITAI ROAD
(Near Commercial Bank)
Jaffna

(38053)(43-11-45-32)

## யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம்

JSAC

செயற்றிட்ட உத்தியோகத்தர்களுக்கான
வெற்றிடம்

யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையமானது **(JSAC) UNHCR, UNICEF** மற்றும் **USAID** போன்ற நிதி நிறுவனங்களின் அனுசரணையுடன் சிறுவர்கள், பெண்களுக்கான சமூகப் பணிகளைச் செய்து வருகின்ற ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனத்திலிருந்து பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**1.பிரதான செயற்றிட்ட உத்தியோகத்தர்கள்:**

★ சிறந்த ஆங்கில மற்றும் கணனி அறிவு, அத்துடன் சிறந்த தொடர்பாடல் திறன்.
★ சமூக செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கான போதியளவு (3வருட) அனுபவம் பெற்றிருத்தல்.
★ அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரிந்த மற்றும் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★ திறமையான செயற்றட்டங்களைத் தயாரித்து, நடைமுறைப்படுத்தும திறன்.
★ வாகன சாரதிப் பத்திரம் மற்றும் பிரயாணம் செய்யக்கூடிய உடல் ஆரோக்கியம்.

**2.செயற்றிட்ட உத்தியோகத்தர்கள்.**

★ சிறந்த ஆங்கில மற்றும் கணனி அறிவு, அத்துடன் சிறந்த தொடர்பாடல் திறன்.
★ பட்டதாரிகள் அல்லது உயர்தரச் சித்தியுடன் கூடிய நிகரான தகைமை.
★ பெண்கள், சிறுவர்களுக்கான செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தும் திறன்.
★ வாகன சாரதிப் பத்திரம் மற்றும் பிரயாணம் செய்யக்கூடிய உடல் ஆரோக்கியம்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகள்
1.வெள்ளிக்கிழமை (08.10.2004) பி.ப. 2.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை அல்லது
2.சனிக்கிழமை (09.10.2004) முற்பகல் 10.00 மணி தொடக்கம் 2.00 மணி வரையான நேரடியான நேர்முகப் பரீட்சையில் தோற்றலாம்.

முகவரி: 159, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.தொ.இல. 021 222 3699

அறிவித்தல்,
இணைப்பாளர்.

(சி-38049)(29-11-45-32)

## மட்டுவில் பகுதியில் லொறி தடம்புரண்டது

சாவகச்சேரி,ஒக்.7

சாவகச்சேரி, புத்தூர் வீதியில் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு அருகில் வீதியில் சென்றுகொண்டிருந்த 'அசோக லேலண்ட்' லொறியொன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் கடந்த திங்கள் இரவு இடம் பெற்றது.

சாவகச்சேரி வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான இந்த லொறி தேங்காய் எண்ணெய் பரல்களுடனும் வேறு பொருள்களுடனும் வலிகாமம் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தின்போது நான்கு சில்லுகளும் மேற்புறமாக தடம்புரண்டு கிடைந்ததாகவும் அதனை செலுத்திய சாரதியும் ஏனையவர்களும் தெய்வாதீனமாக காயங்கள் இன்றி தப்பிக்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4-31)

## மாவீரர் தின ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம்

தென்மராட்சி,ஒக்.7

மாவீரர் வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி கோட்டப்பகுதியில்அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் இன்று பி.ப. 3 மணிக்கு சாவகச்சேரி கந்தையா வீதியில் உள்ள கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டத்தில் உள்ள தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்கள், ஊரக எழுச்சிப் பேரவைச் செயலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.கலைவாணன் அறிவித்துள்ளார். (4-117)

## குப்பிவிளக்குத் தட்டுண்டு சிறுமிக்கு எரிகாயம

தென்மராட்சி,ஒக்.7

குப்பிவிளக்கு சரிந்து தீப்பற்றிக் கொண்டதில் உறக்கத்தில் இருந்த சிறுமி எரிகாயங்களுக்கு இலக்கானார். இச்சம்பவம் நேற்றுமுன தினம் இரவு மட்டுவில் சந்திரபுரத்தில், இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவானந்தராசா றொபேக்கா (வயது 11) என்பவரே எரிகாயங்களுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-117)

## முன்பள்ளி ஆசிரியருக்கான விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய கோட்டங்களின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முத்திரைச் சந்தியிலுள்ள முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட கலந்துரையாடலில் ஆசிரியர்தினம், கண்காட்சி ஆகியன நடத்துவது சம்பந்தமாக ஆராயப்படவுள்ளது. இதில் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவும் கலந்துகொள்கிறார்.

எனவே, சம்பந்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களை குறித்த நேரத்தில் தவறாது சமுகமளிக்குமாறு முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராசா அறிவித்துள்ளார். (4-13)

## Vacancies



**Post 1**: Hardware Technician
Experience: 2 Yrs (min) in Hard ware and Software Installation, Networking and PC Maintenance
**Post 2:** Administrative Officer
Qualification
At least 1 year working experience in a similar capacity or position.
Fluency in English with excellent oral and written communication
Qualified women are encouraged to apply for the above position
REMUNERATION
All positions would be entitled to attractive salaries
Please send your CV within 9 days with contact numbers and names and addresses of two non related referees to
Managing Director
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kandarmadam, Jaffna

## பிற்போடப்பட்டுள்ளது

யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர்
மகா வித்தியாலய பழைய மாணவர்
சங்க நிதிக்காக 06.10.2004 அன்று
அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
தவிர்க்கமுடியாத காரணத்தால்
29.10.2004 ஆம் திகதி
பிற்போடப்பட்டுள்ளது.
பழைய மாணவர் சங்கம்
யா/கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வி.
ஊர்காவற்றுறை.

(37286)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 618 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 05-10-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4000000-4015930 |

வெற்றி இலக்கங்கள்
**05 12 13 36**

லக்கினம் விருச்சிகம்

ஜக்பொட் பரிசு
ரூபா.23,48,100/-
வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை
ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,53,767 | 10/- | 35,37,670/- |
| 2.இலக்கங்கள் | 32,481 | 20/- | 6,49,620/- |
| 1.இல + லக்கினம் | 32,219 | 30/- | 9,66,570/- |
| 2.இல + லக்கினம் | 2,952 | 100/- | 2,95,200/- |
| 3.இலக்கங்கள் | 882 | 500/- | 4,41,000/- |
| 3.இல + லக்கினம் | 66 | 5,000/- | 3,30,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | 1 | 23,48,100/- | 23,48,100/- |
| மொத்தம் | 4,22,377 | - | 1,00,98,410/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,00,98,410/-

தொடர் இல. 5958420 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 08ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4000104-7-20
4003413-4-00
4014414-6-34
4014455-4-15
4000405-1-71

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

எமது நிறுவனத்தில் கீழ்வரும் கற்கைநெறிகளிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.



**Dip in MS Office**
**Dip in Desktop Publishing**
**Internet @ email**
**Quick Book 2000 Pro**
(உயர்கல்வி மாணவர்களுக்கானது)

மேலதிக விபரங்களிற்கு:
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam. Jaffna.
Branch: Sankaththanai, Chavakachcheri T.P:2222674

## துயர் பகிர்கின்றோம்



எமது வித்தியாலய உப அதிபர்
திரு.க.தேவராஜா அவர்களின் அன்பு
தந்தையார்
**நாகமணி கணபதிப்பிள்ளை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

*யா/கரம்பொன்*
*சண்முகநாத மகா வித்தியாலயம்,*
*ஊர்காவற்றுறை.* (37287)(32-11-45)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### நாகமணி கணபதிப்பிள்ளை

(பஞ்சாட்சரம்)



கரம்பொன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது யா/தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி கணபதிப்பிள்ளை (பஞ்சாட்சரம்) அவர்கள் 05.10.2004 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார், நாகம்மாவின் அன்புக் கணவரும் அமரர்களான நாகமணி - சிவக்கொழுந்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் அமரர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், தேவராணி, தேவராஜா (உபஅதிபர், யா/கரம்பொன் சண்முகநாத ம.வி., ஊர்காவற்றுறை), புஸ்பராணி, புஸ்பராஜா (கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம், கச்சேரி - யாழ்ப்பாணம்), மனோரஞ்சனி (முன்னாள் ஆசிரியர், வண்.நாவலர் ம.வி., தற்பொழுது பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியசீலன் (குட்டி, சாவகச்சேரி தற்பொழுது கனடா), மகேந்திரன் (பிரான்ஸ்), யசோதா (டாக்டர்), சத்தியேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜலக்சனாவின் (மாணவி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்புப் பேரனும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் வள்ளியம்மை, அமரர் நடராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர்களான சோமசுந்தரம், சுந்தரம், பொனனம்பலம், புனிதம்மா மற்றும் தருமபூபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2004) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தேவராஜா
(மகன்).

*தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக,*
*பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (37287)(32-11-45)





பல்கலைக்கழக தின நிகழ்வுகள் நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்படப் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் அரங்கில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் யாழ்.பல்கலைக்கழகத்தில் 25 வருட சேவையைப்பூர்த்தி செய்து இளைப்பாறிய முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயருக்கு, துணைவேந்தர் சு.மோகனதாஸ் விருது வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: அலுவலகப்படப்பிடிப்பாளர்)*

## உலக வங்கியின் வீடமைப்புக் குறித்து வவுனியாவில் நேற்று விரிவாக ஆராய்வு

உலக வங்கியின் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் 46 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்த 46 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இது சம்பந்தமான கூட்டம் ஒன்று நேற்றையதினம் வவுனியா அரச செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மன்னார் அரச அதிபர் எஸ். விஸ்வலிங்கம், யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன் மற்றும் உயர் அதிகாரிகளும் உலக வங்கியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன் முதல்கட்டமாக மாவட்ட மட்டத்தில் 100 வீடுகள் நிறுவப் படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி திட்டத்திற்கு உலக வங்கியின் நிதியில் 75 மில்லியன் அமெரிக்கன் டொலர் செலவு செய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-164)

## சரசாலையில் மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,ஒக்.7

சரசாலை மத்தி மயூரி அம்பாள் முன்பள்ளி சிறார்களின் மெய் வன்மைப்போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு சரசாலை இராமாவில் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறும். முன்பள்ளி அபிவிருத்திச்சபைத் தலைவர் ந.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) ஸ்ரீஸ்கந்தராசாவும் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் செ.கலை விரணன், உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா உட்படப் பலர் கலந்து கொள்வர். (எ-117)

The Royal College Of Jaffna
கட்டணம் 1000/= ரூபாவுடன் மூன்று மாதங்களில் ஆங்கிலம் சரளமாகக் கதைக் கலாம். வாரம் 5 வகுப்புகள.
426, (302) K.K.S. Rd. Jaffna. (37290)

ராஜா யாழ்ப்பாணம்


இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு 3ஆவது வாரம்
அர்ஜுன. லாராதத்தா. ரகுவரன். விவேக் நடித்த
அரசாட்சி
ரிக்கெட் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
பு.நே. 10.30,2.30,6.30. (36364)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்றுமட்டும் மதுர
9ஆம் திகதி முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ஸ்ரீகாந். ஸ்நேகா நடித்த
போஸ்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)
(C-37740)

நிரஞ்சனாஸ் சங்கானை
அப்பாஸ். நந்திதா நடித்த.
சிந்தாமல் சிதறாமல்
வெள்ளி, சனி, ஞாயிறு
MEET THE PARENTS
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
இரவு 8.45 (பு.நே.)

லக்ஷ்மி சினிமா இணுவில்
MGR, ஜெயலலிதா. நம்பியார். நடிப்பில்
ஆயிரத்தில் ஒருவன் (ரீல்ஸ)
சில தினங்கள் மட்டும்
தினசரி: 11.00,3.00,7.00மணி (பு.நேரம்) (37288)

சித்ரி சினிமா பண்டத்தரிப்பு

சூர்யா. லைலா. ராஜ்கிரண் நடித்த
நந்தா (ரீல்ஸ)
காட்சிகள் தினசரி 3.00, 7.00
சனி. ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-37902)

சுன்னாகம் றோட்டரக் கழகம்
CELEBRATE ROTARY
10 ஆவது பதவியேற்பு வைபவம்
பிரதமவிருந்தினர்: Rtn.Dr.Robert Arulnayakam Benjamin FRCS (Edin Burg), FRCS (England), DLO (London), FRCS (London).
கௌரவிருந்தினர்: Rtn.E.Saravanabavan (President, Rotary Club of Jaffna).
காலம்: நாளை (08.10.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 12.30 மணி
இடம்: யா/ இராமநாதன் கல்லூரி மண்டபம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- செயற்றிட்ட இயக்குநர்.
(சி-38064)(29-11-18-43)

## ஆசிரியர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி,ஒக்.7

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர்கள், கல்லூரி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை ஆகியவற்றினால் நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரி மண்டபதகில் அதிபர் மு.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், தென்மராட்சி கல்வி வலய உதவிக கல்விப்பணிப்பாளர் (வணிகக்கல்வி) தா.பாலசுந்தரம், கல்லூரி உப அதிபர் க.அருள்தவபாலன் ஆகியோர் உரையாற்றினர்.

முன்னதாக, கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவி ஆசிரியர்களை விழா மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். (எ-117)

வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு நடத்தும்
தமிழ் இலக்கியப் பெருவிழா - 2004
காலம்:- ஒக்ரோபர் 9,10,11 ஆம் திகதிகள்
இடம்:- யாழ்.இந்து மகளிர் கல்லூரி
★ தினமும் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரை - ஆய்வரங்கு
★ தினமும் மாலை 5 மணி தொடக்கம் கலை நிகழ்வுகள்
இலக்கியவிழாவின் முக்கிய நிகழ்வுகள்
★ பண்பாட்டு ஊர்வலம்
★ சுழலும் சொற்போர்
★ நூல்வெளியீடு
★ ஆய்வரங்கு
★ கவியரங்கம்
★ ஆணவ ஒளிப்பேழை வெளியீடு (பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பற்றியது)
★ இலக்கிய விருது வழங்கல் - 2003
★ ஆளுநர்விருது வழங்கல்.
★ நாடக, நாட்டிய, கூத்து நிகழ்ச்சிகள்.
(பண்பாட்டு ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோயிலிலிருந்து ஆரம்பமாகி அரசடி வீதி வழியாக கந்தர்மடம் சந்தியை அடைந்து பின்னர் யாழ்.இந்து மகளிர் கல்லூரியைச் சென்றடையும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாணம்.
(சி-38061)(43-11-18) திருகோணமலை.

மூன்று நாள்களுக்குள் துரித சேவை
சுவிஸிலே வாழும் உங்கள் அன்பு உறவுகளுக்கு வேண்டிய - விருப்பமான உணவு வகைகள், உடுப்பு வகைகள் அன்றாட பாவனைப் பொருள்கள் என்பவற்றை உடனடியாகப் பெற்றுக கொள்ளக் கூடியதாக விமான மூலம் அனுப்பி வைக்க முடியும்.
யாழ்.குடாநாட்டில் ஒப்படைக்கப்படும் பொருள்கள் மூன்று நாளகளில் சுவிஸில் விநியோகிக்கப்படும்.
தொடர்புகளுக்கு
M.நிஷாந்தன்
T.P.:0777 - 323192
குறிப்பு:- கடந்த 5ஆம் திகதிய உதயனில் வெளியான விளம்பரத்துக்கமைய தொடர்பு கொண்டவர்கள்
E.Y.பற்றிக்
T.P.:077 - 7113073
என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொருளகளை ஒப்படைக்கவும்.
(C/38060)(43-18-11)

## கண்ணீர் அஞ்சலி

புலோலி கமநலசேவைகள் நிலையத்தில் சிரேஷ்ட இலிகிதராகக் கடமையாற்றும் திருமதி விசாலாட்சி தனபாலசிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார் கரவெட்டி மத்தியைச் சேர்ந்த

**வேலுப்பிள்ளை கந்தசாமி**

(முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்)

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர், இலிகிதர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், கமநலசேவைக்குழு உறுப்பினர்கள்.

*புலோலி - அம்பன்.*
(சி-38065)(29-11-18)

## மரண அறிவித்தல்

### தியோகுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தியோகுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்று (06.10.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி யோசேப்பின் (சிறில்) அன்புக் கணவரும் அருள்நேசனின் (லண்டன்) பாசமிகு தந்தையும் காலஞ் சென்ற திருமதி அக்கினேஸ் யோசப்மேரியின் ஏக சகோதரரும் அன்ரன் அமலதாசன், திருமதி யூடிற் அன்னைமேரி பெனி பென்ஜமின் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகமூர்த்தி கோயில் வீதி, நெல்லியடி.*
(சி-38062)(29-11-18-43)

தகவல்: அருள்நேசன் (மகன்).

## தமிழ் ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் ஜேர்மன் பிரஜைகளாவர். அவர்களின் சிறுபிள்ளைகளான பார்த்தீபன் (திலீபன்) என்ற மகனும், வவுனிதா என்ற மகளும் கூட ஜேர்மன் பிரஜைகளே.

இவர்களது வீடே நேற்று சுற்றிவளைக்கப்பட்டது. பயங்கரவாதச் செயல்களோடு இவர்களுக்குத் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே ஜேர்மன் காவல்துறையினர் இவர்களது வீட்டைச் சுற்றிவளைத்தனர் என்று கூறப்படுகின்றது. சுமார் இருபத்தைந்து காவலர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் சகிதம் அதிரடிப் பாய்ச்சல் நடத்தினர்.

அச்சமயம் கணவர் ரமேஷ் வவுனியன், தனது வேலைத்தளமான டிராக்டர் கம்பனியில் பணியிலிருந்தார். காவல்துறையினர் அங்கு சென்று அவரை அவரது வீட்டுக்கு அழைத்துவந்தனர்.

வீடு அங்குலம் அங்குலமாகச் சோதனையிடப்பட்டது. இணையத்தள வானொலிக்கான கருவிகள் மற்றும் ஊடகவியலாளரின் இலத்திரனியல் கருவிகள் உட்பட வீட்டிலிருந்த அனைத்துப் பொருள்களும் - நிலத்தில் விரித்திருந்த தரைவிரிப்பு உட்பட சகலவையும் - பொலீஸாரால் அள்ளிச்செல்லப்பட்டன. பரிசோதனைக்காக அவற்றைத் தாங்கள் கொண்டு செல்கின்றார்கள் எனக் காவல்துறையினர் தெரிவித்தனர் என அறியவந்தது.

சம்பந்தப்பட்ட கணவன் - மனைவியை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி பணிக்கும் நீதிமன்ற உத்தரவையும் அவர்களுக்குப் பொலீஸார் கையளித்தனர்.

இலங்கையில் நடக்கும் விடுதலைப் போராட்டத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பிவருபவர் சாந்தி ரமேஷ்.

அவர் அண்மையில் கொழும்பு வந்திருந்தார். இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கொழும்பில் நடத்திய அதன் வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்வில் அவர் பங்குகொண்டார். படுகொலைசெய்யப்பட்ட பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அக்கூட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அவர் நடேசனின் துணைவியாருக்கு சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட ஒருதொகை பணத்தை, நடேசனின் துணைவியாரிடம் அந்த நிகழ்ச்சியில் வைத்துக் கையளித்தார்.

ஈழத்தமிழருக்கு ஆதரவாகக் குரல் எழுப்பும் தமிழ் ஊடகவியலாளருக்கு எதிராக அதுவும் பெண் ஊடகவியலாளருக்கு எதிராக - பயங்கரவாதத் தடுப்புப் போர்வையில் மேற்குலக பொலீஸார் பாய்ச்சல் நடத்தியிருப்பது தமிழ் ஊடக வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. (எ-க)


**கடை வாடகைக்கு விடப்படும்**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபைக்குரிய கே.கே.எஸ். வீதி 317 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 35 ச.மீ. விசாலமுள்ள கடை வாடகைக்கு விடப்படும். தேவையானோர் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

ந.சிவராஜா,
செயலாளர்,
நாவலர் தர்மகர்த்தா சபை.
யா/வண்ணை நாவலர் ம.வி.
யாழ்ப்பாணம். (37271)(29-11-18)


## காதரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்தோடு அப்துல் காதர் எம்.பி. தொடர்பான விசாரணை அறிக்கையையும் அதேதினத்தில் மன்றில் சமர்ப்பிக்குமாறும் பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார் நீதிவான்.

அதேவேளை -

சிறையில் வைத்து காதர் ஹாஜியாரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், முன்னாள் எம்.பியான அனுருத்த ரத்வத்தை யும் நேரில் சந்தித்து சுகம் விசாரித்துள்ளனர். (எ-க)

## படையினரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அது தொடர்பாக அரச அலுவலர்கள் சரியான முறையில் செயற்படாதது மிகுந்தவேதனைதருகிறது.

இந்த மண்ணில் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே அனைவரது விருப்பமும் ஆகும். அதனை ஏற்படுத்துவதற்கு படைத்தரப்பு அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது.

இந்திய மீனவர்களால் இப்பகுதி மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றி எனக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துவந்துள்ளன. இது தொடர்பாக இந்திய - இலங்கை ஆகிய இரண்டு அரசுப்பிரதிநிதிகளும் பேசித் தீர்மானிக்கவேண்டும். இதில் படையினர் தலையிடுவதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை. என்று தெரிவித்தார்.

இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பி.விக்னேஸ்வரன், சறோஜா சிவச்சந்திரன், பொன்மலர் இராஜேஸ்வரன், அ.நல்லதம்பி, வைத்திய கலாநிதி எஸ்.எஸ்.அருளானந்தம், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் உள்ளிட்டோரும்.

படைத்தரப்பில் யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், யாழ்.மாவட்ட சிவில் தலைமை அதிகாரி பிரிகேடியர் ஜே.பி.ரணவீர மற்றும் மேஜர் கல்யாணரட்ண உள்ளிட்டோரும் - கலந்துகொண்டனர். (4-5-ரி)


**உயர் கணக்கீடு**
S.D.J. சுதர்சன் B.Com. HNDA, AAT
(ஆசிரியர் சாஹிராக் கல்லூரி)
விலை 40/=
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா புத்தகசாலைகளில் மட்டும் கிடைக்கும். (சொற்ப பிரதிகளே உண்டு). (37257)

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (off Stanly Rd.)
0777 222422, 0777917781
யாழ் நகரில் முதன் முறையாக புதிய வடிவமைப்பில்
**Diploma in Auto CAD**
காலம்: 3மாதம்
வகுப்புக்கள் ஆரம்பம்
Batch -01 - 12/10/2004
Batch -02 - 16/10/2004
80% OFF


## படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருதரப்புப் பேச்சு மிகவும் சுமுகமான முறையில் இடம்பெற்றன எனக்கண்காணிப்புக குழுவினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது இடம்பெற்றுவரும் படுகொலைகளைத்தடுத்து நிறுத்தும் வகையில் இரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவது என்றும் -

மாவட்டத்தில் மீண்டும் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கு கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் இருதரப்பினரும் தீர்மானித்துள்ளனர்.

இருதரப்பினருக்கும் இடையில் மேலும் புரிந்துணர்வைக் கட்டியெழுப்பும் வகையில் தொடர்ச்சியான சந்திப்புக்களை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றியும் இருதரப்பினரும் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை -

இச்சந்திப்பில் புலிகளின் தரப்பில் உயர் மட்டப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாததால், படைத்தரப்பும் கேணல் தரத்திலான அதிகாரி ஒருவர் தலைமை வகிக்கும் ஒரு குழுவை சந்திப்புக்கு அனுப்பியிருந்தது. (எ-க)

## செஞ்சிலுவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடான சந்திப்புக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆசிய, பசுபிப் பிராந்திய பிரதிநிதி நாயகம் பெட்டோ மியஸ்ரர் தலைமை தாங்கினார்.

மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவின் சர்வதேச ஜெனீவா பணிப்பாளர் லுப்னா பிரிஷ், ஜூரிமார் ஆணைக்குழு செயலாளர் நாயகம் நிக்கொலஸ் வெராவன் -

சர்வதேச மன்னிப்புச் பிரதிநிதி பீற்றர் ஸ்பிலிண்டர், மனித உரிமைகள் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. அலுவலகப் பிரதிநிதி ரிச்சல் பிரேட் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளுடன் தனியான மற்றொரு சந்திப்பையும் நடத்தினார்.

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் விவகாரங்கள் பற்றி அப்போது விரிவாக ஆராயப்பட்டது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் பிரதிநிதிகள் தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கான உத்தரவாதத்தை செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளுக்கு தமிழ்ச்செல்வன் வழங்கினார். (எ-க)

## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதனை எதிர்ப்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ள இடைக்கால தன்னாட்சி வரைபின் அடிப்படையில் உடனடியாக பேச்சைத் தொடங்க வற்புறுத்தியும் -

தமிழீழ தலைநகர் திருமலையில் சட்டவிரோதமான முறையில் வேகமாக கட்டப்பட்டு வரும் பௌத்த விகாரைகள், சிங்களக் குடியேற்றங்கள் என்பவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும்-

சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்தும் மேலும், இனவாத அமைப்புக்கள் திருமலையைத் தமது வன்முறையின் மத்திய இடமாக மாற்றியுள்ளதனைக் கண்டித்தும் -

அமெரிக்கா உட்பட சர்வதேச ஏகாதிபத்தியவாதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளை வற்புறுத்துவதனைவிடுத்து தென்னிலங்கை சிங்கள இனவாத அரசியல் சக்திகளுக்கே சமாதானம் பற்றி அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியும் -

பாதுகாப்புப் படையினர் புதிய காவல் அரண்களை அமைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலரண்களை அகற்றுமாறும்; பின்நோக்கி நகர்த்துமாறும் கேட்டுக்கொள்வதைக் கண்டித்தும் -

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் படையினரால் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்தும், -

அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதி அவர்கள் ஐ.நா.சபையில் ஆற்றிய உரைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தும் -

இலங்கை - இந்தியா அரசின் கூட்டுச் சதியால் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வீரத் தளபதிகள் மாவீரர்களான 17 ஆம் ஆண்டு நினைவினை நெஞ்சில் நிறுத்தியும் -

நாளை வெள்ளிக்கிழமை பூரணஹர்த்தாலை அனுஷ்டித்து ஒன்றுபட்ட எதிர்ப்பை வெளிக்காட்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

பாடசாலைகள், தனியார் கல்வி அமைப்புக்கள், வர்த்தக அமைப்புக்கள் உட்பட சகலவற்றையும் மூடியும், அரச, தனியார் போக்குவரத்துக்களை முற்றாக நிறுத்தியும் பூரண ஆதரவு வழங்குமாறு 'தமிழ் மக்கள் பேரவை' மேலும் கேட்டுள்ளது. (எ-க)


வெல்பவர்கள் பின்வாங்குவதில்லை
பின்வாங்குபவர்கள் வெல்வதில்லை
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
கணக்கீடு ஆரம்பம் 08.10.2004
A/L 2005 Sat. Sun. 7.8 a.m.
**கம்பனி**
விக்னா
கல்வி நிறுவனம்
(37277)

**A/L 2006**
புவியியல்
**எறியம்**
ஆரம்பம்:
09.10.2004 (சனி)
பொருளியற்கல்லூரி - யாழ்ப்பாணம் - 9.00
பொருளியற்கல்லூரி - இணுவில் - 11.00
பாரதி - சித்தன்கேணி 4.00
(37275)
P.S. குமரன்
B.A. (Hons).

GRADE - 9
ENGLISH
Model Paper & Past Papers (2001, 2002, 2003) With Answers
COMPILED By T. THANENDRAN
**அதிரடி வெளியீடு**
தரம் 9 மாகாண மட்ட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிற்கான முற்றிலும் எதிர் பார்க்கும் மாதிரி வினாத்தாள்
**ENGLISH**
Past Papers (2001, 2002, 2003) With Answers
தொகுப்பு: த. தனேந்திரன்
B.COM. (Hons). M.M.SPl, H.N. Dip-In Acc. P.G.Dip.In.Edu.
பகுதிநேர விரிவுரையாளர் (ஆங்கிலம்)
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்.
கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம், சுப்பிரமணிய, சிறிலங்கா, துர்க்கா (சுன்னாகம்), சிதம்பரப்பிள்ளை, பிரியங்கா, அறிவமுது, கவிதா (வவுனியா), மணி கல்வி நிறுவனம் (வேலணை).

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
**இலவசக்கணனிப்பயிற்சி**
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 08.10.2004 இற்கு முன் நேரில்

ஸ்டெபர்ட் மோட்டார் கம்பனி லிமிட் வழங்கும்
HERO HONDA
VASI SAVARI
வாசி சவாரி
நீங்களும்
**அதிர்ஷ்டசாலிகள் ஆகலாம்**
2004 செப்ரெம்பர் 20 முதல் ஒக்ரோபர் 20வரை மட்டுமே இவ்வாய்ப்பு.



- ★ 9 வெற்றியாளர்களும் எவ்வித செலவுகளும் இல்லாமல் இந்தியா அழைத்துச் செல்லப்படுவார்கள்.
- ★ புதுடெல்லியிலுள்ள ஹீரோ ஹொண்டா தொழிற்சாலையை பார்வையிடவும் வாய்ப்பு.
- ★ உலக ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலுக்கும் சென்று வரலாம்.
- ★ 27 ஆறுதல் பரிசுகள்.
- ★ போட்டிக்கான கூப்பன்களை ஸ்டெபர்ட் மோட்டார் கம்பனி லிமிடட் இற்கு அனுப்ப வேண்டும்.
- ★ அனைவருக்கும் ஏற்ற வகையில் ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் தற்பொழுது விசேட விலைகளில்

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company
RG
இரத்தினகோபால்ஸ்
65.63 கன்னாதிட்டி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 222 6185
0777-340056

SCC விசேட சலுகைகளுடன் கணனிப்பயிற்சி
பிரிவு III ஆரம்பம் 09.10.2004

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MS OFFICE 2003 | 5 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER PROGRAMMING | 12 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN VISUAL BASIC | 4 Months |
| DIPLOMA IN VISUAL FOXPRO | 4 Months |
| DIPLOMA IN AUTOCAD | 4 Months |
| DIPLOMA IN C++ | 4 Months |

மேலேயுள்ள பயிற்சி நெறிகளில் ஒன்றைத் தொடரும் மாணவர்கள் கீழுள்ள பயிற்சி நெறி ஒன்றை இலவசமாக கற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

1.DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
AccPac + Quick Book Pro + MYOB
அதிக சர்வதேச Accounting Packages ஊடாக கற்பிக்கப்படும்
Duration 4 months

2.DIPLOMA IN INTERNET E-MAIL
Duration 2 months

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170,0777292127, 0777846811


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.